# முகடு

Mukadu


"தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

mukadu.editer@gmail.com

இருமாத இலக்கிய இதழ். புரட்டாதி - ஐப்பசி 2015 ஓலை - 7

## தமிழ் மக்களின் துயர் தீர்க்க காந்திய வழியில் போராடிய அறப் போராளி

**காந்தியவாதி டேவிட் ஐயா**



கருவறை இழந்து
உயிருடன் துடிக்கும் குழந்தையின் அழுகுரல்
போல
அவர்
பிரிந்ததை எண்ண
இடிந்திடும்
கண்களில்
செந்துளி கொட்டிடும் காலம்
கடும்வலி தாங்கா
இருதயம் மெல்ல இசைப்பதை
ஒருகணம் நிறுத்தும்
கண்களைத் துடைத்து
அவர் முகம் பார்க்க
நாக்கினில் வார்த்தைகள் தட்டும்

அவர்
எழுர்ச்சியாய் பேசிய
வார்த்தையை எண்ணிக்
கவிதையைத் தொடர
உணர்வுகள்
தீபம் ஏற்றும்
அவர் பெயர் சொல்ல
உணர்வினைத் தீண்டி
உள்மனம் உடைந்து நீறாகும்

விடுதலை வேண்டிப்
பசியுடன் வாடிக்
கசங்கிய
பூவின் தாகம்

பெரியவர் தடுக்க சிறியவர் கெஞ்ச
இலட்சியம் வென்றிட்ட சிகரம்

நாடி குறைந்து நாவினை இழுக்க
வேள்வியில் நோய்யதாய் ஆனார்

அவர் பற்றியதீயில்
படர்ந்த நம்தேசம்

கவிதை:ப.பார்த்தீ




ஓவியம்:ஆர்த்தி

பாருடன் மோதும்
பேர் ஆனோம்

அண்டை தேசம்
அகிம்சையின் தேசம்
அலட்சியம் செய்து
உயிரினை
வேண்டிய கோரம்

கொடும்புயல் வந்து
கொண்டதை அழித்து
கோரமாய் மாறிய
ஊர் போல் ஆகும்

ஆண்டுகள் நீண்டிட
அழிந்திடா
நம் நினைவில்
வாரீர்

நம் அன்னையர் செய்திடும்
ஒரு பிடி உணவினை உண்டு
எம் அன்பினை ஏற்ப்பீர்

# தீர்வு சாத்தியம் இல்லை

வாசு



போராட்டங்களின் அரசியல் ரீதியான வெற்றி என்பது இரு விடையங்களின்நேர்கோட்டு சமநிலையை அடிப்படையாகக் கொண்டது. புற நிலைகள் - அக நிலைகள்ளன்று குறிப்பிடலாம். நமது போராட்டம் என்பது அக நிலை அதன் வெற்றியின் பங்குதாரர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்பது புற நிலை. அகநிலையில் நமது
போராட்டம் மிகவும் காத்திரமான நிலையில் இருக்க வேண்டியது எப்போதும் முக்கியமானது. காரணம், புறநிலைகள் எப்போது நமக்கு சாதகமாக வரும் என்பதைகணிப்பது மிகவும் சிக்கலானது. அதற்கான நகர்வுகளை நாம் மேற்கொள்ள முடியுமாயினும், அது முழுமையாக நம்மால் இயக்க முடியாத ஒன்று.

தந்தை செல்வா அவர்களின் காலகட்டம் என்பது தமிழர்களின் முதல் படிப்பினைக்கான காலம் என்று நாம் உறுதியாகக் கூற முடியும்.என்றென்றைக்கும் தமிழர்களுக்கான முக்கிய படிப்பினை அந்தக் காலகட்டம் தான். அதில் தெளிவாக தமிழர்களுக்கு வரையறுத்துக் காண்பிக்கப்பட ஒன்று, இலங்கையின் சிங்கள இனவாத பீடங்களின் தலைவர்கள் தமிழர்களுக்கு உரிமைகளைத் தரமாட்டார்கள் என்பது. இது ஒரு தெளிவான கூற்று. இந்தக் கூற்று ஒரே நாளில்முடிவானது இல்லை. கணக்கற்ற ஜனநாயக ரீதியான போராட்டங்கள். அந்தப் போராட்டங்ளின் வெற்றி என்று காண்பிக்கப்பட்ட சிங்கள-தமிழ் தலைமைகளின் இடையிலான கைச்சாத்து ஒப்பந்தங்கள். அவை அத்தனையும் நடைமுறைக்கு வராமல் போனது. வெளிப்படையாக சொன்னால் குப்பைக் கூடைக்கு போனது. இந்த பாடத்தை இப்போதும் மறந்து மறுபடி கற்றுக்கொள்ள சில தமிழர் தலைமைகளும் சில தோற்ற மயக்கத்தில் மருகி நிற்கும் தமிழர்களும் முயல்கிறார்கள் என்பதும் இங்கு உண்மை.

இந்த முதற் கட்ட படிப்பினை என்பது முழுக்க முழுக்க இலங்கைக்குள் நடைபெற்றதாகும். புற நிலைகளை புற சக்திகளை நாடியோ நம்பியோ நடைபெற்றவை அல்ல. இந்த முதற் படிப்பினையின் மூலம் நாம் கற்றுக் கொண்டவைகளை இப்படியாக வரிசைப் படுத்தலாம்...

இலங்கைக்குள் தமிழர்களுக்கான தீர்வு சாத்தியம் இல்லை இலங்கை இனவாத சிங்கள தலைமைகள் தமிழர்களுக்கு உரிமைகளை தராது சாத்வீக ஜனநாயக போரட்டங்களின் வெளிகள் முடக்கப் படுகின்றன ஆயுத அடக்கு முறைகள் கையில் எடுக்கப்படுவதால் நாம் நம்மை தற்காத்துக் கொள்ள வழி தேட வேண்டும். இதன் முழுமையான அர்த்தம் தமிழர்களுக்கு தனி நாடு என்பதாக முடிந்தது. இலங்கைக்குள் தீர்வு என்ற விடையத்தை தாண்டி போனது என்பது இங்கு மிக முக்கியமான படிப்பினை அல்லது உறுதியான முடிவு.

ஒரு வரலாற்று படிப்பினையில் இருந்து பரிமாண வளர்ச்சி பெற்று உருவானதே தமிழ் ஈழத்துக்கான ஆயுதப் போராட்டம் ஆகும். இலங்கைக்குள் பேசுவது என்ற தோற்றுப் போன ஒரு கருத்தியலை அடிப்படையாக வைத்தே. புற நிலை சக்திகளை தமக்கு பலமாக சேர்ப்பது. தமது நியாயங்களை புற நிலை சக்திகளுக்கு வெளிப்படையாக புரிய வைப்பது. தங்களின் நியாயமான உரிமைப் போராட்டத்துக்கு
ஆதரவு நிலையை உருவாக்குவது. இது தமிழகத்தில் ஆதரவு நிலையை உருவாக்குவதாகட்டும் அல்லது மேற்குலக
நாடுகளில் ஆதரவுகளை திரட்டுவதாகட்டும், இவைகள் அனைத்தும் ஆயுதப் போராட்ட காலகடத்தின் தொடக்கமாகும். அதற்கு முன் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு இந்த நகர்வுகள் நிகழவில்லை. தமிழர்களுக்கான பிரச்சார ஆதரவு மையங்கள் போராட்ட நிதி ஆதரவு மையங்கள் இப்படியாக அவைகளை வரிசைப் படுத்தலாம்.

மிகப்பெரிய வெற்றிகரமான பயணமாக இந்த புறநிலைகளை சார்ந்த அக நிலைப் போராட்டம் அமைந்ததாக சொல்ல முடியாது என்றாலும். அது சிறப்பாகவே நடை பெற்றுள்ளது என்று நாம் கூற முடியும். தமிழர்களின் தமிழ் ஈழத்துக்கான போராட்டம் வெற்றிகரமாக நகர்ந்து போனதும், உலக நாடுகள் புலிகளின் தலைமையுடன் பேசும் நிலைக்கு போனதும் இதன் விளைவுகள் தான். இதன் போது தான் தமிழர்களின் உரிமைப் போராட்டம் உலகளாவிய ரீதியில் ஓரளவேனும் கவனம்

பெற்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தின் மிகப்பெரிய நகர்வு இது என்பதையும், இதன் காரண கர்த்தாக்கள் விடுதலைப் புலிகள் என்பதையும் வரலாற்றில் உறுதியாக எழுதலாம்.

இந்த அக நிலை - புற நிலை போராட்ட பரிணாம வளர்ச்சி இலங்கை அரசுக்கும், இலங்கையின் கடல் பரப்பை சார்ந்து பூகோள அரசியல் நலன்களை முன்னெடுக்கு சர்வதேச நாடுகளுக்கும் ஒரு நெருக்கடியாக மாறியது. அதை தகர்க்க வேண்டிய நிலைகளை நோக்கி அவர்கள் நகர்ந்தார்கள். ஓரளவு அதில் வெற்றியும் பெற்றார்கள். ஈழ ஆதரவாளர்களின் கைதுகளும் நிதி முடக்கல்களும்...
அதன் தொடர்ச்சியான நிகழ்வுகளும் இந்த பரிணாம வளர்ச்சியை ஒடுக்கும் முறைகளாகவே நிகழ்ந்தன. இந்த புறநிலை ஒடுக்கலை சாத்தியப் படுத்திய பின் ஆயுதம் போராட்டம் என்ற தமிழர்களின் அக நிலைகள் மேலான ஒடுக்கல் மேற்கொள்ளப் பட்டதையும் அனைவரும்
அறிவோம்.

கடந்த ஆறு வருடங்களாக ஓரளவுக்கு நாம் அடுத்த கட்ட நகர்வை நோக்கி நடந்துவந்திருக்கிறோம். ஒரு ஆயுத போராட்ட முடிவும், இன அழிப்பின் காயங்களும் தாங்கி நிற்கும் ஒரு இனமாக இருந்தாலும் நாம் நமக்கான இலக்கை நோக்கி சாத்தியமான வழிகளில் தான் செல்கிறோம். இது மாயத்தோற்றம் அல்ல. சர்வதேச ரீதியாக நமக்கு நீதி கேட்க்கும் சரியான வழி முறையும் இது தான். இதை சாத்தியப்படுத்தும் வலுவும் சூழலும் புலம் பெயர் தமிழ் சமூகத்துக்கே உண்டு. ஈழ மண்ணில் வாழும் மக்களால் அது முடியாது. வெளிப்பார்வைக்கு சுதந்திர வெளி போல தென் பட்டாலும் அது ஒரு சூன்யமான சுழல் என்பதை நாம் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

ஒரே நாளில் நிச்சயம் நமக்கு நீதி கிடைத்து விடாது என்ற யதார்த்தத்தை புரிந்து கொண்டு நம்மிடம் இருக்கும் வலுவான ஒரு போராட முறையாக வழியாக நாம் இதில் சொல்லத்தான் வேண்டும். கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு ஒரு அடக்குமுறைக்குள்
போராட முடிந்த இனத்தால் இதை தொடர்ந்து ஜனநாயக வெளிகளில் மேற்கொள்வது ஒன்று கடினமாக இருக்கப் போவதில்லை. சிங்கள இனவாதத்தின் மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கூர்மையான கத்தி இது. இதை வலுவேற்றிக் கொண்டிருக்கும் மட்டும் நாம் நெருக்கடியை கொடுத்துக் கொண்டே இருக்கலாம். நமக்கான கள நிலவரமும், ஆசிய பிராந்திய அரசியல் பூகோள நிலைக்களை நமக்கு சாதகமாக வரும் வரை நாம் காத்திருக்கத்தான் வேண்டும்.

நமது வலுவான தமிழ் இன அழிப்புக்கான நீதி கோரலை வலு இழக்க வைக்கும் அல்லது மடை மாற்றும் வழிகளை தொடர்ச்சியாக முன் எடுக்கவும் சர்வதேச சக்திகள் முயலும். வேறு வழிகளில் நீதி கிடைக்கும் ஒரு உள்நாட்டு தீர்வை பேசா இருக்கிறோம் அதற்கு, இன அழிப்பு என்ற வார்த்தைகள் தடை என்று இன்னும் பல ஆலோசனைகளை முன் வைப்பார்கள். என்னதான் முயன்றும் தமிழர்கள் விழிப்புடன்
உள்ளனர் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த அடுத்த கட்டமே நாட்டுக்குள் தேர்தல் முறைகள் மூலம் தமிழர்கள் வலுவுடன் உள்ளனர். எதிர்கட்சியாக அமர்கின்றனர். தமிழர்கள் பேசும் வல்லமைக்கு வந்து விட்டனர் போன்ற மாயத் தோற்றங்களை சர்வதேச வெளியில் ஏற்படுத்தும் முயற்சிகள்.

இந்த எதிர்கட்சி வலு என்ற போலித்தனத்தை அடையாளம் காண முயல்வோம்....

எதிர்கட்சி என்பது ஆளும் கட்சிக்கு மாற்றாக இருக்க வேண்டும். ஆனால், தமிழ் கட்சிகளின் உண்மையான நிலை, இலங்கை அரசாங்கத்தில் உள்ள மந்திரிகளின் அளவில் பாதி கூட இல்லை இவர்களின் எண்ணிக்கை. சம்பந்தர் ஐயா சொன்னது போல அவரால் ஒரு சிங்கள தலைவராகவே நடந்து கொள்ள முடியும். அவர் குரலே அங்குள்ள சிங்கள குரல்களில் ஒன்றாகவே அடையாளம் காண முடியும். தனித்த அவர் குரலுக்கு எந்த சக்தியும் இல்லை. எண்ணிக்கை அடிப்படையில் உண்மையில் ஒரு எதிர்கட்சியாக பாராளுமன்றம் போன காலம் என்றால் அது அமிர்தலிங்கம் தலைமையில் போனதே ஆகும். அப்படியான ஒரு தமிழர்களின் வலுவுடன் போன அவரால் 1983 கலவரத்தில் தமிழர்களை கிஞ்சித்தும் காக்க முடியவில்லை.தமிழர்களுக்கு சட்டரீதியான வலுவான பாதுகாப்பான நிலைகள் வரும் வரை எவராலும் அது முடியாது தான். இலங்கை எதிர்கட்சித் தலைவர் ஒரு தமிழராக, தமிழர்களின் பிரதிநிதியாக இருந்த காரணத்தினால் இலங்கைக்குள் எங்கும் ஓட முடியாமல், சேலை கட்டிக் கொண்டு இந்தியாவுக்கு ஓடினர் என்பது எவ்வளவு பெரிய யதார்த்தமான நெஞ்சைச் சுடும் உண்மையைச் சொல்கிறது என்று சொல்லிப்
புரியவைக்க வேண்டியதில்லை. தமிழ் ஈழம் இருந்திருந்தால் அவர் அங்கு பாதுகாப்பாக போயிருக்க முடிந்து இருக்கலாம். ஒவ்வொரு இன அழைப்பின் போதும் தமிழர்கள் தங்கள் மண்ணான வடக்கு - கிழக்கை நோக்கியே ஓடுகிறார்கள், அங்கும் சிங்கள இனவாதத்தின் இராணுவம் நிற்கிறது... என்ன செய்வது ? இன்னும் ஐந்தாண்டுகள் இலங்கையின் சிங்கள இனவாத அரசியல் பீடங்களை நம்பி இப்படியே இருக்கப் போகிறோமா, இல்லை நமக்கான பாதைகளில் வலுவாக கால்பதிக்கப் போகிறோமா என்ற தெளிவு மிக முக்கியமானது. தமிழர்கள் சற்றுக் குழப்பப் பட்டுள்ளார்கள் என்ற தெளிவு வேண்டும். சர்வதேசத்திடம் நீதி கேட்க்கும் சர்வதேசத்தை நோக்கிய பயணம் மட்டுமே நமக்கான வழி. ஈழத் தமிழர்களின் முதற் படிப்பினை, தந்தை செல்வாவின் உள்நாட்டில் இலங்கை அரசுடனான
உரிமை கேட்கும் முயற்சியின் தோல்வியில் இருந்து, இன்று வரை நமக்கு கிடைக்கும் ஒரே பாடம் உள் நாட்டில், ஒன்று பட்ட இலங்கைக்குள் நமக்கு தீர்வு சாத்தியம் இல்லை. நமது வலுவான பயணம் சர்வதேசத்தை நோக்கி நகரட்டும். "தமிழ் ஈழப் போராட்டத்தை புலம் பெயர் இளம் தலைமுறையிடம் ஒப்படைக்கிறேன்" என்ற வார்த்தைகள் உங்கள் செவிகளை எட்டும் என்று நம்புகிறேன். ●

**எண்ணித்துணிக கருமம்!**

# வன்னிப்பெரு நிலப்பரப்பில் ஆய்வுக்குட்படுத்தப்படாத தொல்லியல் மையங்கள்

பகுதி-6

தியாகராஜா திபாகரன்.
ஊடகவியலாளர்.





## கல்விளான்:-

துணுக்காய்ப்பகுதியில்துணுக்காயிலிருந்து வெள்ளாங்குளம் செல்லும்வீதியில் உள்ளகல்விளான் என்னுமிடத்திலும் கல்விளான்குளத்திற்கு இடதுபுறம்வயல்வெளிக்குஅருகாமை யில்உள்ளஏறக்குறைய 20 ஏக்கர்பரப்பளவுப் பகுதிக்குள்மிக முக்கியமான கட்டிடஇடிபாடுகளும், கோட்டைஅல்லது அரண்மனை இருந்ததற்கானதடையங்களும், ஆதாரங்களும், மட்பாண்டஓடுகளும், குவிந்தநிலையில்அவ்விடம்பெரியமண் மேடாகக்காணப்படுகின்றது.

அத்துடன் கருங்கற்றூண்கள், சிற்பவேலைப்பாடுடைய கற்றூண்கள் மண்ணுள்புதையுண்டும், வெளிக்கிளம்பியும் காணப்படுகின்றது. இப்பகுதி நான்கு ஐந்துகாணித்துண்டுகளாக பிரித்து அப்பகுதிக் குடிய ிருப்பாளர்களின்தனித்தனிகாணித்துண்டுகளாககாணப்பட்டாலும்இப்ப குதி முழுவதும்ஒருபுராதனநகருக்குரியதன்மையுடையதாகவேகாண ப்படுகிறது.

கட்டட இடிபாடுகள்உடைய மேட்டிலிருந்துபார்க்கின்றபோது மேற்கும், வடக்குப்பகுதியும் தாழ்வானபகுதியாகவும், எந்தஅசைவையும் அவதானிக்கக்கூடியதாகவும் தென்படுவதனால் ஒருகோட்டையின் மீதுநிற்கின்ற மனஉணர்வே பொதுவாகயாவருக்கும் ஏற்படும்.இவ்விடம் புராதனகால உத்தரதேசகுறுநிலமன்னர்களின் வாழ் விடமாக இருந்திருக்கவேண்டும். 10 ஆம்நூற்றாண்டுக்குரிய சோழர்காலகலை வடிவமைப்பு கொண்ட கற்றூண்கள் அங்கேநிறுவப்பட்டுள்ளது. ஆனால்கல்விளான் பகுதியில் கருங்கற்பாறைகளை எங்கேயும ் பெறமுடியாது மிக நீண்டதூரத்திலிருந்தேஇவை இப்பிரதேசத்திற்குக்காவிச் செல்லப்பட்டு கட்டடம் நிர்மானிக்கப்பட்டதிலிருந்து மிகப்பெரும்மனித உழைப்புஅன்றைய காலத்தில் அதற்குத்தேவைப்பட்டிருக்கும்.ஆகவே இப்பிரதே சத்தில்சனத்தொகை செறிவான குடியிருப்புப்பகுதி நிச்சயமாக இருந்திருக்கவேண்டும். இந்தப்பிரதேசம்போரின் ஓய்வின்பின்தற்போது இலங்கையரசினால் தொல்பொருளாய்வுக் காகசில தனியாருடைய காணிகள்யாரும்செல்லாதவாறு தடைசெய்யப்பட்டபகுதியாகமாற்றப்பட்டுள்ளது. எனினும் இங்கேகிடந்த பலகற்றூண்கள் இராணுவத்தினரால் எடுத்துச்செல்லப்பட்டுவிட்டதாக ஊர்வாசிகள் தெரிவிக்கின்றனர். அத்தோட இப்பகுதியை ஒருபௌத்ததலமாக மாற்றுவதற்கான முயற்சிகளும் திரைமறைவில் இடம்பெறுவதாகதகவல்கள் வெளியாகின்றன. எனவேஇப்பகுதியில் பாரபட்சமற்ற நேர்த்தியான தொல்லியல் ஆய்வு மேற்கொள்ளப்படுமா? என்பதுதான் கவணிக்கபடவேண்டியவிடயமாகும்.



♦தன் அச்சங்களிலிருந்து மீண்டு வருகிறவன் தான் உண்மையில் சுதந்திரம் அடைகிறான்.
♦இடர்ப்பாடுகள் ஒருவனுக்கு உண்மையான நண்பர்களை எடுத்து காட்டும்.
நல்ல ஆரம்பம் வேலையை பாதி ஆக்கிவிடும்.
♦அன்பில் அச்சம் கலந்திருக்க முடியாது. நாம் கண்டு அஞ்சும் மனிதனிடம் நம்மால் அன்பு செலுத்த முடியாது.
♦மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே.
♦பெருந்தன்மையான குணம் எல்லா நற்குணங்களுக்கும் ஆபரணம் போன்றது.
♦இன்பம் வரும்போது அதைப் பற்றி சிந்தனை செய்யாதே. அது போகும் போது அதைப் பற்றி சிந்தனை செய்.
♦நம்முடைய நற்பண்புக்கும்,நம்முடைய அறிவாற்றலுக்கும் ஏற்றபடிதான் நாம் அடையும் மகிழ்ச்சி இருக்கும்.
♦மனித இனம் மேலும் வளர்ச்சி பெற்ற நிலையில் இல்லாததற்குக் காரணம், வெள்ளங்களும் மற்ற இயற்கைப் பேரழிவுகளும்தான்.
♦கனவானது தூக்க நிலையின் சிந்தனை.

# இலங்கை இராணுவத்தின்
# தற்போதைய எதிரி யார்?

வி.சபேசன்



ஒரு இராணுவம் எப்பொழுதும் வினைத்திறன் மிக்கதாக இருக்க வேண்டும் என்றால், அதற்கு ஏதோ ஒரு எதிரி இருந்து கொண்டே இருக்க வேண்டும். எதிரி என்கின்ற விம்பம் இராணுவத்திற்கு மிக அவசியமானது.

உலகிலே வலிமை மிகுந்ததாக கருதப்படுகின்ற அனைத்து ராணுவங்களிற்கும் எதிரி உண்டு. எதிரி இயல்பாக உருவாகவில்லை என்றால் குறிப்பிட்ட நாடுகள் வலிந்து ஒரு எதிரியை உருவாக்கிக் கொள்ளும்.

உலகில் நாகரீகம் வளர்ந்து, பின்னர் அரசுகள் உருவாகிய காலம் தொட்டு போர்கள் நடந்தபடியே இருக்கின்றன. ஏறக்குறைய 50 நாட்களே உலகம் முழுவதும் போர்கள் இல்லாமல், அமைதியாக இருந்ததாக வரலாற்று அறிஞர்கள் கணித்து வைத்திருக்கின்றார்கள். மற்றையபடி உலகின் ஏதாவது ஒரு நாட்டில் போர் நடந்தபடிதான் இருந்தது.

முதலாம், இரண்டாம் உலகப் போர்களின் போது, உலகின் பெரும்பாலான நாடுகள் போரில் ஈடுபட்டன. போர்கள் நடக்க, நடக்க, இராணுவங்களும் அவைகளின் படைக்கல வலிமையும் வளர்ச்சியுற்றன.

போர் நடக்காத காலங்களிலும், எதிரி பற்றிய விம்பத்தை வைத்து நாடுகள் தமது இராணுவத்தை பலப்படுத்தின. ஆயுதங்களை உற்பத்தி செய்தன. போர்ப் பயிற்சிகளை பெரும் எடுப்பில் நடத்தின. போருக்கான தயார் நிலையில் இராணுவத்தை எப்போதும் வைத்திருந்தன.

நேரடியான ஆயுதப் போர் நடக்காத பனிப்போர் காலத்திலும் நாடுகளுக்கு எதிரியை தேட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. உலகம் இரண்டாக பிளவு பட்டுக் கிடந்தது. மூன்றாம் உலகப் போர் வரும் என்று சொல்லியே தமது இராணுவத்தை போர் நிலையில் வைத்திருக்க முடிந்தது.பனிப்போரின் நேரடியான, மற்றும் மறைமுகமான விளைவுகளாக உலகின் பெரும்பாலான நாடுகளில் போர்கள் நடந்தபடி இருந்தன. இராணுவங்களுக்கு அப்பொழுது எதிரியை தேடுவது பிரச்சனையாக இருக்கவில்லை.1990இல் பனிப் போர் முடிந்ததும், மேற்குலக நாடுகளின் இராணுவத்திற்கு திடிரென்று எதிரி என்கின்ற விம்பம் இல்லாமல் போய் விட்டது. இதனால் பல இராணுவத்தினர் உளவியல் சார்ந்த சிக்கலுக்கு கூட ஆளானார்கள்.

பல நாடுகள் இராணுவக் குறைப்பை செய்தன. ஆயினும் இருக்கின்ற இராணுவத்தை வலுமிக்கதாக வைத்திருப்பதற்கு எதிரி விம்பம் தேவையாகவே இருந்தது.

அதுவரை மேற்குலகினால் ஆதரித்து வளர்க்கப்பட்ட இஸ்லாமிய தீவிரவாதம் எதிரியாக முன்னிறுத்தப்பட்டது. இன்று பயங்கரவாதத்திற்கு எதிரான போர்“ என்கின்ற பெயரில் மேற்குலகின் பெரும்பாலான நாடுகளின் இராணுவம் உலகின் ஏதோ ஒரு மூலையில் போரிட்டபடிதான் இருக்கின்றன.

முப்பது ஆண்டுகளாக தமிழர்களுக்கு எதிராக போரிட்டுக் கொண்டிருந்த இலங்கை இராணுவத்திற்கு இன்றைக்கு எதிரி என்பது யார்?

இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிடவில்லை. சிங்கள நாட்டின் இராணுவமாக தமிழர் தாயகத்தின் மீது படையெடுத்தது. முப்பது ஆண்டுகள் தமிழர்களை எதிரிகளாக கருதி போரிட்டது. பெரும் கொலைகளை புரிந்து போரில் வெற்றி கொண்டது.

போர் முடிந்த பிறகும் இலங்கை இராணுவத்திற்கு “எதிரி“ பற்றிய பிரச்சனை உருவாகவில்லை. காரணம் முதலில் சொன்னது போன்று அதன் எதிரி என்பது புலிகள் இல்லை. தமிழர்கள்தான்.

ஆகவே அது வெற்றி கொள்ளப்பட்ட தமிழர்களை மேலாதிக்கம் செய்கின்ற வேலையை செய்து வந்தது. மகிந்த ராஜபக்ஸவின் ஆட்சியில் இது மிகுந்த ஊக்கத்தோடு நடைமுறைப்படுத்தப்பட்டது.

தமிழர்களை சோதனையிடுதல், கைது செய்தல், கண்காணித்தல், தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள், தமிழர் நிலங்களை பாதுகாப்பு வலயம் ஆக்குதல், அனைத்து நிகழ்வுகளில் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொள்ளல், வெற்றிச் சின்னங்களை அமைத்தல் என்று இலங்கை இராணுவம் வெற்றி கொள்ளப்பட்ட இனம் மீது மமதையோடு தனது மேலாதிக்கத்தை நிலை நாட்டியது.

சோதனைச் சாவடிகள் குறைக்கப்பட்ட போதும், அது வன்னியின் வாசலில் ஓமந்தையில் நின்று வருகின்ற, போகின்ற தமிழர்களை சோதனையிட்டது. தமிழர்கள் மீதான மேலாதிக்கத்தின் முக்கிய குறியீடுகளில் ஒன்றாக இந்தச் சோதனைச் சாவடி இருந்தது.

தமது பிரதான எதிரி மீது மேலாதிக்கம் புரிதல், அந்த எதிரி இன்னொரு போருக்கு தயாராகி விடாது தடுத்தல் என்கின்ற செயற்பாடுகளின் மூலம் இலங்கை இராணுவத்தின் செயற்திறன் தக்க வைக்கப்பட்டது.

அப்படியே முஸ்லீம்கள் மீது தாக்குதல் நடத்தி இன்னும் ஒரு கள முனையை திறப்பதற்கான சிறிய முயற்சிகளும் பரீட்சித்துப் பாக்கப்பட்டன.இடையிடையே மகிந்த ராஜபக்ஸ தரப்பினால் இந்தியா, மேற்குலகம் போன்றவை கூட எதிரிகளாக முன்னிறுத்தப்பட்டன. இந்தியப் படையெடுப்பு, அதை சமாளித்தல் என்பவை பற்றிக் கூட ஒரு நேரத்தில் பேசப்பட்டது.

காடுகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு, ஒரு வல்லரசை எதிர்த்து கெரில்லாப் போரை நடத்துவதற்கு தயார் நிலையில் இலங்கை இராணுவம் இருப்பது போன்ற தோற்றமும் உருவாக்கப்பட்டது. இப்படி மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை இராணுவத்திற்கு எதிரி பற்றிய சிக்கல் இருக்கவில்லை. ஆனால் மெது மெதுவாக இலங்கை இராணுவம் குடிமக்களிடம் இருந்து விலக்கப்படுகிறது. சோதனைச் சாவடிகள் மூடப்படுகின்றன. ரோந்துக்கள் நிறுத்தப்படுகின்றன. தமிழர்கள் மீது நேரடியான மேலாதிக்கம் செய்ய முடியாத ஒரு நிலையை சர்வதேசம் மெதுவாக உருவாக்கி வருகின்றது.

மறுபுறம் எதிரியாக முன்னிறுத்தப்பட்ட இந்தியா, மேற்குலகம் போன்றவை இலங்கையுடன் நெருங்கி வருகின்றன.

இதிலே இலங்கை அரசிடம் மனித உரிமைகள் சார்ந்த கோரிக்கைகளை வைக்கின்ற மேற்குலம், அது தன்னுடைய இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை வைக்காதது ஆச்சரியம்.

இலங்கை இராணுவம் தனது நாட்டின் மக்கள் தொகைக்கு சம்பந்தம் இல்லாமல் எண்ணிக்கையில் ஊதிப் பெருத்து நிற்கிறது. ஏறக்குறைய நான்கு இலட்சம் படையினர் இலங்கைத் தீவில் நிற்கின்றாஉகள்.ஆயதப் பயிற்சி பெற்ற இளைஞர்களை இலட்சக் கணக்கில் வீட்டுக்கு அனுப்பினால், வேறு பல சிக்கல்களை இலங்கை சந்திக்க வாய்ப்புண்டு. எதிரி பற்றிய விம்பம் இல்லாமல் வெறுமனே நான்கு இலட்சம் படையினரை பேணுவது என்பதும் மிகக் கடினமான காரியம்.உண்மையில் இலங்கை இராணுவம் இப்பொழுது "எதிரி" குறித்த ஒரு சிக்கலை சந்திக்கின்ற நிலையில்தான் இருக்கின்றது. அதற்கு அவசரமாக ஒரு எதிரி தேவைப்படுகிறது.அந்த "எதிரியை" இலங்கை இராணுவம் தனது சொந்த அரசாங்கம் மீதே தேடி விடக் கூடிய நிலை வரக் கூடாது என்பதிலும் மேற்குலகம் அக்கறையாக இருக்கிறது.

ஆகவே மேற்குலகம் என்ன செய்யும் என்றால், முதலில் ஒரு கண்துடைப்பான விசாரணை மூலம் இலங்கை இராணுவத்தின் மீது உள்ள "போர்க்குற்றம்" என்னும் கறையை கழுவி சுத்தப்படுத்தும்.அதன் பிறகு "பயங்கரவாதத்திற்கு" எதிரான போரில் இலங்கை இராணுவத்தையும் மேற்குலகு இணைத்து, உலகின் ஏதோ ஒரு மூலையில் அதற்கு ஒரு போர் முனையை கொடுக்கும்.

**நீங்கள் மற்றவர்களிடம் பேசும்பொழுது, சரியான நேரத்திலோ அல்லது தவறான நேரத்திலோ, காரணத்துடனோ அல்லது காரணமின்றியோ, அமைதியாகவோ அல்லது கடுமையாகவோ, ஒரு குறிக்கோள் பற்றியோ அல்லது குறிக்கோள் இன்றியோ, மனம் நிறைந்த அன்புடனோ அல்லது மனம் நிறைந்த வெறுப்புடனோ பேசலாம். அப்பொழுது கீழ்க்கண்டவாறு உங்களைப் பயிற்றுவித்துக் கொள்ளவேண்டும்:**


**"நம் மனம் தவறான வழியில் செல்லாது, தீயவைகளைப் பேசாது, இரக்கத்துடனும் கருணையுடனும் மனம் நிறைந்த அன்புடனும் வெறுப்பின்றியும் வாழலாம். நாம் நிறைந்த அன்புடன் ஒருவரிடம் தொடங்கி, விசாலமான, நிறைந்த, அளவிட முடியாத, பகைமை இல்லாத கேடற்ற இந்த அன்பை இவ்வுலகெலாம் பரப்பி அனைவரிடமும் அன்பு காட்டி வாழலாம்." இவ்வாறு உன்னை நீ பயிற்று வித்துக் கொள்ள வேண்டும்.**



# கி.பி அரவிந்தன்:ஒருகனவின் மீதி

## நோர்வேயில்இடம்பெற்றநூல் அறிமுகமும் சிலகுறிப்புகளும்

ரூபன் சிவராஜா




கி.பி அரவிந்தன்:ஒருகனவின் மீதி எனும் நூல் ஈழப்போராட்டமுன்னோடி,கவிஞர்,ஊடகவியலாளர்,சிந்தனையாளர் எனத் தமிழ்ச் சூழலில் பன்முகப்பரிமாணங்களையும் வகிபாகத்தினையும் கொண்டிருந்த கி.பி அரவிந்தன் அவர்களின் நினைவு-களைத் தாங்கிதமிழகத்தில் உருவாக்கம் பெற்றுள்ளது.இந்நூல் புலம்பெயர் நாடுகளில் முதன்முறையாகநோர்வேயில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. தமிழ்3 வானொலியின் ஏற்பாட்டில் 06-09-15 ஒஸ்லோவில் இதன் அறிமுகநிகழ்வு இடம்பெற்றது.

ஆயுதப் போராட்டத்தை முன்மொழிந்து,அதில் துணிந்து இறங்கியமுன்னோடிகளில் ஒருவராக,தமிழீழவிடுதலைக்கான கருத்தியல் ரீதியான,சிந்தனைரீதியான பங்களிப்பாளராக,தமிழின் முக்கிய இலக்கியப் படைப்பாளிகளில் ஒருவராகஎன மூன்று பெரும் இயங்குதளங்களில் அரவிந்தனது வகிபாகத்தைக் குறிப்பிடலாம்.

இம்மூன்று இயங்குதளங்களும் முறையே தாயகம்,தமிழகம், புலம் என மூன்றுவெவ்வேறுவாழ்விடங்களில், மூன்றுவெவ்வேறுகாலகட்டங்களில் அமையப்பெற்றதாகும்.அதற்கேற் றாற்போல்,தாயகம்,தமிழகம்,புகல் நாடுகளில் வாழும் அவரோடுபழகிய,வெவ்வேறு காலகட்டங்களில் அரரோடு பணிபுரிந்த,அவரை அறிந்த தோழர்கள், எழுத்தாளுமைகள்,கல்வியாளர்கள், இலக்கியகர்த்தாக்கள்,ஊடகவியல ாளர்கள்,சமூகசெயற்பாட்டு ஆளுமைகளின் கட்டுரைகளும்,நினைவுப் பகிர்வுகளும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

அரவிந்தன் எனும் ஆளுமையின் கணிசமானபரிமாணங்களைக் காத்திரமாகப் பதிவுசெய்துள்ளது இந்நூல். கட்டுரைகள் நேர்த்தியானமுறையில் தொகுக்கப்பட்டு,நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தைச் சேர்ந்தஎழுத்தாளரும் கவிஞருமானபா.செப்பிரகாசம்,எழுத்தாளர் ரவிக்குமார் ஆகியோர் தொகுத்துள்ள இந்நூலினை,மணற்கேணிபதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இக்குறிப்பினைஎழுதியவரின்தலைமையில் இடம்பெற்ற நூல் அறிமுகஅரங்கில்எழுத்தாளரும் கவிஞருமானபா. செயப்பிரகாசம்,கவிஞர் இளவாலைவிஜயேந்திரன்,கவிஞர் சோதியா (சிவதாஸ் சிவபாலசிங்கம்),எழுத்தாளர் குணாகவியழகன் மற்றும் கி.பி அரவிந்தனின் உடன்பிறந்தசகோதரர் அல்போன்ஸ் கிறிஸ்தோபர் ஆகியோர் கருத்துரைகளைஆற்றியிருந்தனர்.

'கிறிஸ்தோபர் பிரான்சிஸ்'எனும் இயற்பெயர் கொண்டஅரவிந்தன்,ஈரோஸ் (ஈழ புரட்சிஅமைப்பு) அமைப்பின் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தபோது'சுந்தர்' என்றபெயரில் அறியப்பட்டவர். 'கி.பி.அரவிந்தன்'என்பதுஅவர் கவிஞராகத் தன்னைநிலைநிறுத்தியதறுவாயில் அவருடையஅடையாளப் பெயராகிப் போனது. இந்நூலில் கிறிஸ்தோபர் பிரான்சிஸ்சைத் தரிசிக்கமுடிகிறது. சுந்தரைஅறிந்துகொள்ளமுடிகிறது. கனவின் மீதியைச் சுமந்துநின்ற கி.பி.அரவிந்தன் என்றஆளுமையின் கணிசமானபரிமாணங்பகளும் வெளிப்படுகின்றன.

பன்முகப் பரிமாணங்களில் இயங்கியஒருஆளுமைஎன்பதற்குஅப்பால் அவருடைய எளிமையும்,கனிவுமிக்கஉளப்பண்பாடும், பரந்தபார்வையும் அவரைதனித்துவமானதொரு ஆளுமையாக நிலைநிறுத்தக் காரணமாயிருந்ததுஎனகருத்தாளர்கள் பலராலும் விதந்துபகிரப்பட்டது.

தமிழ்ச் சூழலில் வரலாற்றுவகிபாகமுடையஆளுமையெனத் தயக்கமின்றிக் கூறக்கூடிய கி.பி. அரவிந்தன் அவர்கள் பற்றியநெகிழ்வானநினைவுகள் இந்நிகழ்வில் பகிரப்பட்டமையும், அவர்பற்றியகாத்திரமானபதிவுகளைக் கொண்ட இந்நூல் அறிமுகம் செய்துவைக்கப்பட்டமையும் அவருடையநினைவுகளைப் போற்றுதல் என்பதற்குஅப்பால் தமிழ்ச் சமூகத்திற்குஅவசியமானது.

அவருடைய 45 ஆண்டுகாலப் பொதுவாழ்க்கையென நோக்குமிடத்து,ஆயுதப் போராட்டத்தின் முன்னோடியாக 70களின் ஆரம்பத்திலிருந்து 70களின் இறுதிவரைதாயகத்தில் தலைமறைவுவாழ்க்கையுடன் கூடிய சிங்களஅடக்குமுறை நக்கெதிரானபோராட்டத்தையும் - தமிழீழத்தின் மாணவர் எழுச்சியினகுறியீடாகவிளங்கும் தியாகி.பொன் சிவகுமாரனோடு கை கோர்த்துகளச் செயலாற்றிய காலகட்டத்தையும் உள்ளடக்கியது.80களின் ஆரம்பத்திலிருந்துஅதன் முடிவுவரை தமிழகத்தைத் தளமாகக் கொண்டு தமிழீழவிடுதலைக்கான அரசியல் மற்றும் ஊடக- இதழியல் பணிகள்.பின்னர் 90களின் ஆரம்பத்திலிருந்து அவருடைய மறைவு நிகழும் வரையான இரண்டரைச் தசாப்தங்கள் - புலம்பெயர் சூழலில்ஒருபடைப்பிலக்கிய வாதியாக,கவிஞராக,ஊடகவியலாளராக,சமூகபண்பாட்டுத் தளங்களில் தொடர்ச்சியாக இயங்கியகாலகட்டமாகஅமைகின்றது.




அரசியல் விடுதலையை அவாவிநிற்கும் ஒருசமூகத்தின் நலன் சார்ந்துபெரும் பிரக்ஞைபூர்வமானசெயல் முனைப்புக் கொண்டிருந்தஅவர் தொலைநோக்குச் சிந்தனையும்,வெளிப்படைத் தனமைமிக்க உளப்பண்பாட்டினையும்,முற்போக்கான உலகப் பார்வையும் கொண்டிருந்தார் என்பதை அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் அறிவர்.

”ஜனநாயகம், வெளிப்படைஎன்பவையே நமது அடிப்படைகளாகமாறவேண்டும். ஜனநாயகம் எனநான் குறிப்பிடுவது,வெறும் தேர்தல் ஜனநாயகத்தைஅல்ல,நமதுஉள ப்பண்பாட்டினையே ஜனநாயகமாக்குதல்”என்பதாகஅவருடைய கூற்றுஒன்றுஉள்ளது. இதுஎத்தகையைஆழம் மிக்க, கூர்மைமிக்க,அறிவுபூர்வமான கூற்றுஎன்பதைப் புரிந்துகொள்வதன் மூலம் அவருடையசிந்தனையையும் உளப்பண்பினையும் புரிந்துகொள்ளமுடியும்.

ஈழவிடுதலைப் போராட்டத்திற்குத் தமிழகத்தைப் பின்தளமாக்கஅடித்தளமிட்டுச் செயலாற்றியவர்களில் கி.பி. அரவிந்தன் அவர்களின் வகிபாகம் காத்திரமானதுஎன்பதைஎவரும் மறுத்திடமுடியாது. குறிப்பாகஇலக்கியமற்றும் ஊடகமட்டங்களிலானதொடர்புகளைத் தனது இறுதிக் காலம்வரை இடையறாதுபேணிவந்தவர். இன்னொருவகையில் சொல்வதானால்,தமிழகமற்றும் தமிழீழ,அதிலும் குறிப்பாகபுலம்பெயர் இலக்கியத்துறைகளுக்கிடையிலான ஒரு பாலமாக அவர் திகழ்ந்தார் என்றால் அதுமிகையல்ல.

அவருடைய மறைவினை அறிந்தமறுகணமே,சென்னையிலும் மதுரையிலும் வேறுபல இடங்களிலும் அவருக்கானநினைவேந்தல் நிகழ்வுகள் அவருடைய தமிழகத்தோழமைகளால் நடாத்தப்பட்டது. சில இலக்கியமாத இதழ்கள்அவருடையநினைவுக்கான சிறப்பிதழ்களை வெளியிட்டன. தமிழகம் அவரைவாஞ்சையோடுதாங்கிக் கொண்டது என்பதன் வெளிப்பாடே இவை.

தமிழ்த் தேசியவிடுதலைப் போராட்டமுன்னோடியானஅவர், அறப்போராட்டத்தினுடைய தோல்வி,ஆயுதப் போராட்டத்தினுடைய தோற்றம், வளர்ச்சி, எழுச்சி, வீழ்ச்சி எனஅனைத்துக் காலகட்டங்களினதும் சாட்சியமாக இருந்திருக்கின்றார். ஒவ்வொருகாலகட்டத்திலும் காலத்தேவை கருதிய அடிப்படைகளில் தனது பங்களிப்பினை வழங்கிவந்திருக்கின்றார்.தமிழர்களின் விடுதலைஅரசியல்,சமூக,பண்பாட்டுத் தளங்களிலும் மற்றும் இலக்கியப் பரப்பிலும் அவரதுவகிபாகத்தினைத் தனி மனிதசம்பவங்களாகச் சுருக்கிவிடமுடியாது. அவருடைய 45 ஆண்டுகால பொதுவாழ்விற்குள் தமிழர்களுடைய வாழ்வியல் இருக்கின்றது. கடந்துவந்தஅரசியல் பாதை இருக்கின்றது. இலக்கியம் இருக்கின்றது. பண்பாடு இருக்கின்றது.

நூல் அறிமுகஅரங்கில் கவிஞர் இளவாலைவிஜயேந்திரன் தனதுகருத்துகளைப் பகிர்ந்தபோது,ஆயுதப்போராட்ட முன்னோடியாகஅவருடையஅர்ப்பணிப்புமிக்கபங்களிப்புத் தொடர்பாகத் தான் நேரில் அறிந்தபலவிடயங்களைப் பகிர்ந்துகொண்டார். அவருடைய இலக்கிய ஆளுமைமிகஆழமானது. அதுமட்டுமல்லாமல் அவர் ஒருசிறந்தவிமர்சகராகவும்,எப்பொழுதும் தீவிரமானவாசகராகவும் இருந்தார். கி.பி அரவிந்தனின் இந்தஆளுமைகளைநெருங்கிப் பழகியவர்கள் மட்டுமேநன்கறிவர் எனகவிஞர் விஜயேந்திரன் மேலும் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் தங்கியிருந்தகாலத்தில் அவருடன் ஏற்பட்ட பழக்கம்,அவரோடுபழகிய அனுவபங்கள்,அதன் ஊடகஅவரிடம் கண்டுகொண்டதோழமையும் எளிமையும் நிறைந்தபண்பு பற்றியும் பகிர்ந்தார்.கருத்துமுரண்பாடுகளைக் கொண்டிருப்பவர்களுடனும் அரசியல், இலக்கியம்,சமூகம் சார்ந்துநாகரீகமாகவும் ஆக்கபூர்வமாகவும் உரையாடுகின்ற,உறவினைப் பேணுகின்ற, இணைந்துபணியாற்றும் உயர்ந்தவிழுமியங்களைக் கொண்டிருந்தஅ வரதுஉளப்பண்பாடுசார்ந்தும் விஜயேந்திரன் விதந்துரைத்தார்.

சகபடைப்பாளிகளை, இளைய எழுத்தாளர்கள்,ஊட கவியலாளர்களுக்குகளமமைத்துக் கொடுப்பதிலும் ஆக்கபூர்வமானஉந்துதலைவழங்குதிலும் அவர் முன்னுதாரணமாகவிளங்கினார்.


”அரசியல் முரண்பாடுகளைக் கடந்து ஏதோவொருதளத்தில் இணைந்து பணியாற்றமுடியு மென்றயதார்த்தத்தை

வேறெவரிடமும் பார்க்கசுந்தரிடம் அதிகம் உணர்ந்தேன்" என்பதுவிஜயேந்திரனின் கூற்றாகவிருந்தது.அவரோடுநெருங்கிப் பழகிய,அவரை ஆழமாக அறிந்த,அவர் மதிப்புவைத்திருந்த இன்னும் சிலஆளுமைகளின் பகிர்வுகள் வெளிவந்திருந்தால் இந்நூல் மேலும்முழுமைபெற்றிருக்குமெனவும் சுட்டிக்காட்டினார்.

ஆரம்பகாலத்தில், சிறிலங்காவின் அடக்குமுறைகளுக்கு எதிரானபோராட்டச் செயற்பாடுகளை கி.பிஅரவிந்தன் எவ்வாறுமுன்னெடுத்தார்,அதனால் அவரும் குடும்பத்தினரும் எவ்வாறான சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்தது என்பதுபற்றிய,பரவலாகவெளியில் அறியப்படாததகவல்களைச் சகோதரர் அல்போன்ஸ் கிறிஸ்தோபர் பகிர்ந்துகொண்டார்.

வீரியமானதொரு பேனாப் போராளி கி.பி.அரவிந்தன் எனக்குறிப்பிட்டகவிஞர் சோதியா,ஒரு முறைபழகிய அனுபவமும் நினைவுகளுமே பல நாட்கள்,பலமாதங்கள் பழகியஅனுவபங்களாகவும் நினைவுகளாகவும் விரிந்துநிற்கின்றன. எல்லாமனிதர்களுக்கும் இத்தகையஆளுமைவாய்ப்பதில்லை. கனிவுடன் பலரைத் தம்வசப்படுத்துவது,தமதுகருத்துகளால் ஆகர்சித்துக் கொள்ளும் ஆளுமைபலருக்கு இருப்பதில்லை. ஆனால் கி.பி. அரவிந்தன் அத்தகைய ஆளுமையைக் கொண்டிருந்தார் எனக் கூறினார்.

இந்நூல் அருமையானதொருஆவணம். இந்நூலில் இந்த ஆளுமைவாதியின் சகலபரிமாணங்களும்,சகலகோணங்களும் பதியம் பெற்றுள்ளன.
ஆயுதம் தாங்கியஒருபோராளி பின்னர் பேனாவைவரித்துக்கொண்டு,ஒரு இலக்கியவாதியாக ஒரு ஊடகராக எழுத்தாளராக சமூகச் செயற்பாட்டாளராகப் பரிமாணம் பெற்று இவ்வளவு உயரத்திற்குப் பேசப்பட்டிருந்தஒருஆளுமையைப்







பற்றியநூல் என்றவகையில் இது முக்கியத்துவம் பெறுகின்றது என்றுதனதுஉரையில் கவிஞர் சோதியாமேலும் தெரிவித்தார்.

அவருடைய கூர்மையான சமூகப்பார்வைதான் அவரை ஒரு உன்னதமானமனிதனாக,பண்பாளனாக உருவாக்கியது என்பதை அவருடையகருத்துகளிலிலிருந்து உணர்ந்து கொண்டதாகவும்,சமாதானகாலத்தில் வன்னிக்குஅவர் பயணித் திருந்தபோதுதொடங்கியநட்பு,அவர் நோயுற்றுமரணத்தறுவாயில் உத்தரித்தநாட்கள் வரைநீடித்ததுஎனத்தனக்கும் அவருக்குமானபந்தத்தினைப் பற்றிப் பகிர்ந்துகொண்டார் எழுத்தாளர் குணாகவியழகன்.

ஸ்கைப் காணொலித் தொழில்நுட்பம் மூலம் உரையாற்றிய கவியழகன் மேலும் கூறுகையில்,
மிடுக்கில்லாதகுரல் - இருந்தாலும் அந்தக் குரலில் ஒருகனிவிருக்கும். அவருடையதோற்றம் ஒரு ஆளுமையைவெளிப்படுத்தும் தோற்றம் கிடையாது ஆனாலும் முகத்தில் ஒரு அன்பு பொதித்திருக்கும். ஆவரின் வாழ்க்கைஒருஉன்னதமானவாழ்க்கையாகத் தான் இருந்தது ஆனாலும் அந்தவாழ்க்கையில் மிகுந்தஎளிமைகுடியிருந்தது.என்றார்.

அவருடைய உளப்பண்பும்,சிந்தனையும் தான் என்னை அவரோடுதன்னை ஒட்டவைத்ததுஎனவும்,2009இற்குப் பின்னர் அவர் அடைந்தமன உத்தரிப்புச் சொல்லிமாளாதுஎன்றும் தெரிவித்தார். ஆரம்பகாலப் போராளியாக இருந்தஒருவர்,தன்னுடையவாழ்கால த்திலேயே தன்னுடையமக்கள் ஒரு அரசியல் கையறுநிலைக்குள் தள்ளப்பட்டஅந்தவலியைச் சுமந்துகொண்டுசாகநேர்ந்ததுஒருமாபெரும் உத்தரிப்பு. அது அசாதாரணமானது அல்லஎனவும் கவியழகன் தனதுஉரையில் பகிர்ந்துகொண்டார்.

இந்நூலின் தொகுப்பாளர்களில் ஒருவரானஎழுத்தாளரும் கவிஞருமானபா.செயப்பிரகாசம் அவர்கள் நூல் உருவாக்கமுயற்சி,கட்டுரைகள் தொகுக்கப்பட்டமுறைமைபற்றிக் கூறுகையில் மணற்கேணி,காக்கைச் சிறகினிலே,உயிரெழுத்துஆகிய இதழ்களில் வெளிவந்தகட்டுரைகள் அவ்விதழ்களிடம் அனுமதிபெற்றுமீள்பதிப்புச் செய்யப்பட்டதோடு,பதிதாகப் பலரிடமிருந்துகேட்டுப்பெற்றகட்டுரைகளும்,நினைவுப் பதிவுகளும் இணைக்கப்பட்டுள்ளதுஎன்றார்.

ஒரு போராளிஎன்ற சொல்லுக்குத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொண்டவராகவேகி.பி.அரவிந்தன் எக்காலத்திலும் இருந்தார் என்றவகையில்,அத்தகையபோராளியின் நினைவுகளைத் தாங்கிய இந்நூலினைப் பதிப்பித்துவெளிக்கொணர்ந்தமை மகிழ்ச்சிக்குரியது என்பதோடு,அதனையொருகாலக்கடனாகத் தாம் கருதுவதாகவும் செயப்பிரகாசம் குறிப்பிட்டார்.

# நடந்து முடிந்த இலங்கை தேர்தல் எமக்கு சொல்லி நிற்பது என்ன?

டிலானி




கடந்த காலங்களை போலவே இந்த இலங்கை தேர்தலும் எமது தமிழ் மக்களால் பெரிதும் எதிர்பார்க்கபட்ட தேர்தலாகவே இருந்தது. தமது பணப்பையை தக்க வைத்துகொள்ள அரசியல்வாதிகளும் தமது நலன்கள் கொஞ்சமாவது காக்கப்படவேண்டும் என்று மக்களும் தமது வாக்குகளை அள்ளி போட்டனர். ஆனால் யாழ் மாவட்டத்தை பொருத்தவரை மக்களின் மனநிலை தமிழ் அரசியல் பிச்சைகளால் குழப்பட்ட நிலையினை எம்மால் அவதானிக்க முடிகின்றது.அரைக்கரவாசியான மக்கள் தமது வாக்குக்களை சிதறடித்தே வழங்கியிருந்தார்கள். இந்த சிதறடிப்பு சிங்கள அரசியலில் வெற்றி என்றே எடுத்துகொள்ள முடியும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பானது வெற்றி ஈட்டி கொண்ட போதிலும் சிங்கள தலைமையானது மிகவும் பலமான நிலையில் பாராளுமன்றத்தில் அமர்ந்திருப்பதை எமது மக்களும் அரசியல் ஞான சூனியங்களும் உணர்ந்துவிட மறுக்கின்றனர். மகிந்த ,மைத்திரி கூட்டணி எமது இறுதிகாலம் வரையிலும் ஒரே மேசையில் கைகோத்த களவாணி கூட்டணி என்பதனை எமது அரசியல்வாதிகளும் மக்களும் மறந்து போனதே தமிழ் மக்களின் சாபமாக உள்ளது.சிங்கள தலைமைகள் மட்டுமே இப்போது மாற்றம் அடைந்திருக்கின்றது. ஆனால் சிங்கள தலைமையின் தமிழர்களுக்கு எதிரான பார்வை மாற்றம் அடையவில்லை என்பதே உண்மை.

எமது உரிமைகள் இலங்கையில் சுமூகமாக தீர்க்கப்படும் என எம் மக்களின் கனவு நனவாகவே செல்லும். வரும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானமும் செல்லுபடியாகாத ஒரு செல்லா காசாகவே மாற்றப்படும். ஜனநாயக போராளிகள் கட்சி என்று உருவாக்கபட்ட கட்சியில் பலவந்தமாக நிர்பந்த கைதியாக இணைக்கபட்ட போராளிகளின் நலனுக்கு வேண்டிய உதவிகளை முடிந்தளவு செய்வோம்.

தமிழ் கூட்டமைப்பு என்ற கட்சியின் பெயரானது என்று தமிழரசு கட்சி என்று பலரால் உச்சரிக்கப்படும் நிலைக்கு மாற்றம் பெற்றதோ அப்போதே அந்த கட்சியின் உண்மை நிலையையும் எமது நிலையினையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். எம் விடுதலை கட்டமைப்பால் உருவாக்கபட்ட கட்சியானது கொஞ்சம் கொஞ்சமாக தனது கோர பற்களை காட்ட ஆரம்பித்து இருக்கின்றது என்று உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் கூட்டணி கட்சியானது மக்களின் உண்மையான தேவை என்ன என்பதனை நாடிபிடித்து பார்த்து இனிவரும் காலங்களில் மக்களின் நலனுக்காக மனசுத்தியுடன் செயற்பட வேண்டும் என்று விரும்பி நிற்கின்றோம்.

புலம்பெயர் தமிழர்களை பொருத்தவரை அவர்களின் சிந்தனையானது முற்று முழுதாக மாற்றம் வேறு திசையை நோக்கி பயணிக்க ஆரம்பித்து இருப்பதே உண்மையாகும். அதற்கான சிறந்த

உதாரணமாக மகிந்தாவை கூண்டில் ஏற்ற கேட்கப்பட்ட கையெழுத்து வேட்கையில் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு என்ன என்பதனை எமக்கு மிக தெளிவாக காட்டி நின்றார்கள்.இவர்களின் இந்த நிலையினை மாற்ற வேண்டுமாயின் தன்னலம் இல்லா தலைவர்கள் உருவாக வேண்டும்,அல்லது உருவாக்க வேண்டும், இன்றைய புலம்பெயர் மக்களின் தலைவர்கள் தமது நலனுக்காக மட்டுமே செயற்படுகின்றார்கள் என்பதனை தமிழ் மக்களாக தமிழ் உணர்வாளர்களாக ஒவ்வொருவரும் ஏற்றுகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களாகிய நாம் எமது தோல்விகளை எவ்வாறு மாற்றி அமைத்து எமது மக்களுக்கான உரிமைகளை நிலைநாட்ட போகின்றோம் என்றே சிந்திக்க வேண்டும். எம்மால் முடிந்தளவு எமது மக்களின் தேவையினை நிறைவேற்ற பாடுபடுவோம். வறுமை கோட்டுக்கு கீழே வாழும் எம் சொந்தங்களுக்கு கை கொடுப்போம்.தமிழர்கள் நாம் முதலில் தமிழராக இணைவோம்.

# என் தாய்தேசமே

ரதிமோகன்
டென்மார்க்

செந்தாமரையொத்த வதனங்களும்
செவ்வரி படர்ந்த வேல்விழிகளும்
பாய்ந்து வரும் ஏவுகணைகளாய்
மறவரையும் சாய்த்து விடும்...

கொவ்வைப்பழ செவ்விதழ்களில்
செந்தமிழின் சுவையும்
வெஞ்சினம் கொண்ட வீர
வஞ்சியர் வாழ்ந்த நம் தேசம்....

இத்தரையின் செழிப்பும் எழிலும்
மாற்றாரை வசீகரித்துச்செல்ல
பத்தரைமாற்றுத்தங்க பெண்டீர்
அந்தகார இருளுக்குள்
அச்சமின்றி நடந்து செல்ல
கொற்றவை அரசாண்ட நம் தேசம்...



கற்பகதரு விருட்சங்களும்
கற்சிலை சிற்பங்களும்
கரைபுரண்டோடிய வீரம் சொல்லும்
கடலலைகள் மேலெழுந்து
குறிஞ்சிநிலத்தழகை வீராப்பாய்
பண்ணிசைத்துச்செல்லும்...

குற்றாலமாய் சிரிப்பொலிகள்
கொட்டிக்கிடந்த சந்தோசங்கள்
கட்டிக்காத்த பாரம்பரியம்
கொட்டிய போர் மழையிலே
மின்னலாகி மறைந்து போக
கன்னங்களில் கவிதைகளாய்
கண்ணீர் எழுதிச் செல்ல
தாய் மண்ணின் நினைவுகள்
கார்கையென் நெஞ்சோரம்....

# ஒரு போராளியின் குருதிச்சுவடு

கவிமகன்.இ



ரஞ்சன் பயங்கர பிடிவாதகாரன்.... அவன் நினைத்த காரியத்தை செய்யும் வரை ஓய்வெடுக்க மாட்டான் செங்கதிரின் தாய் அடிக்கடி அவனை நினைவூட்டும் போதெல்லாம் தன்நெஞ்சுக்கும் கைக்கும் இடையில் நடக்கும் போருக்கு மத்தியில் வெளிவரும் வார்த்தைகளின் கோர்வையாக கூறுபவை. உண்மையும் அதுவே எடுத்த கருமம் அதில் வெற்றி அடையும் வரை ஓய்வுறக்கம் இன்றி உழைக்கும் தன்மை கொண்டவன்.

தனது ஐந்து வயது முதல் போராட்டத்தின் பிடியில் வதைந்து போனவன். சிங்கள இனவாதத்திற்கு எதிராக போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்துக்கு முன்பாகவே சாதியவாதிகளின் பலத்த அடக்குமுறைகளுக்குள் அடங்கி போகாமல் வீறு கொண்டெழுந்த போராளிகளை உறவுகளாக கொண்டு உதித்தவன் இவன் தனது வீட்டு முன்றலில் தந்தை சாதிய கொடியவர்களால் தாக்கப்பட்டு இறக்கும் நிலையில் இருந்த கோலத்தை கண்டு ஐந்து வயதிலையே போராட்ட குணத்தை தன்னகத்தே உருவாக்கி கொண்டவன்.

யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதியில் ஒரு குக்கிராமத்தில் பிறந்தவன் இவனை பெற்றவர்கள் இவனுக்கு இட்ட பெயர் இருப்பினும் இவனது செல்ல நாமமாக வழக்கம் கொண்டது ரஞ்சன் என்ற சுருக்க பெயரே. இவனது கற்றல் முறைமையில் போராட்ட குணம் பெரிதும் ஆதிக்கம் செலுத்தியது என்பது இங்கு முக்கியம் பெறுகிறது ஏனெனில் இவன் கற்றலை விட ஆதிக்கவாதிகளையும் சாதியவாதிகளையும் முற்றாக வெறுத்து அவர்கள் மீதான எதிர்ப்பு நடவடிக்கைகளையே முன்னிறுத்தியிருந்தான். பள்ளிக்கு செல்வதை விடுத்து போராட்ட வாழ்வை அரவணைக்க துடித்து கொண்டிருந்தான். இருப்பினும் இவனது உறவினர்கள் இவனின் கல்வியில் ஆதிக்கம் செலுத்த தொடங்கிய காரணத்தால் கற்றல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டான் ஆனாலும் இவனது மனம் கற்றலை விட போராட்ட வாழ்வையே நோக்காக கொண்டு செயல்பட ஆரம்பித்திருந்தது. கற்ற பள்ளியில் கூட படித்த சிங்கள மாணவர்களுக்கும் இவனுக்கும் அடிக்கடி மோதல்களும் முரண்பாடுகளும் வளர தொடங்கின. தாம் பெரிய இனத்தவர்கள் என்று இறுமாப்பு கொண்ட உயர் சாதி மாணவர்களுக்கும் இவனுக்கும் இடையில் பலத்த முரண்பாடுகள் வெளிப்பட தோன்றின இந்த நிலையில் தனது கற்றலை முற்று முழுதாக இடைநிறுத்தி தனது போராட்ட வாழ்வில் தடம் பதித்தான். முதலில் அவனை கவர்ந்த போராட்ட அமைப்பாக தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் இருந்தது இதன் கொள்கைகள் அவனுக்கு பிடித்து போய் அமைப்பு சார்ந்த பரப்புரை வேலைகளை முன்னெடுத்தான். சேர்ந்தான்.கிராமங்கள் தோறும் சென்று அவ்வமைப்புக்காக மக்களுக்கு பரப்புரை செய்தான். இந்த வேலைகளுக்காகவே தான் கற்க வேண்டும் என்ற நிலை உருவானதால் லெனின், ஸ்ட்ரலின், மாவோசெதும் ஆகியோர் எழுதிய நூல்களின் தமிழ் மொழி பெயர்ப்புக்களை தேடி வாசிக்கத் தொடங்கினான். எப்பொழுதும் மாவோவின் சிந்தனை என்ற சிறிய நூல் ஒன்று அவன் கையில் இருக்கும். இந்த நிலையில் அவ்வமைப்பில் இருந்து வெளியேறினான். சில காரணங்கள் அவ்வமைப்பில் இருந்து அவனை வெளியேற்றியது. இருப்பினும் அப்போது சிறு அமைப்பாக இருந்தாலும் ஆற்றலும் சாதுரியமும் மிக்க தலைமையை கொண்ட விடுதலை புலிகள் அமைப்பு அவனை உள்வாங்கி கொண்டது. ஒரு ஆயுத போராளியாக களம் காண புறப்பட்டான். "செங்கதிர்" என்ற இருளகற்றும் சூரியனாக தலைவன் வழிகாட்டலை ஏற்று தனது பணி தொடர நெல்லியடி பிரதேச அரசியல் பொறுப்பாளர் என்ற நிலையோடு களம் இறங்கினான். மக்கள் இவன் கூட நெருங்கி


இருந்தார்கள் என்பதை விட இவன் எப்போதும் நெல்லியடி பிரதேச மக்களுக்குள்ளேதான் இருந்தான் என்பது பொருத்தமானது. பல இடர்கள், தேடுதல்கள், காட்டிகொடுப்புக்கள் என்று பயணித்த ஒவ்வொரு மணித்துளியிலும் அவனை அவன் நேசித்த அந்த மக்களே காத்தார்கள்.
சிங்கள இராணுவத்துக்கும் இந்திய வல்லாதிக்க படைகளுக்கும் இடையிலான ஒவ்வொரு போரிலும் களம் கண்டு நிமிர்ந்து நின்றான் அந்த மாவீரன். அன்று ஒரு நாள் தம்பி எங்கட பக்கம் வந்தவன் அன்று ஆயத்து சந்தியில நின்ற இந்தியன் ஆமி.... என்று தொடங்கிய
பெரியவரது முகத்தை நோக்கி எமது கண்கள் திரும்பின. இந்தியன் ஆமி தம்பியை பிடிச்சிட்டான். எங்கட பெடியன அவன் கைது செய்ய நாங்க பார்த்து கொண்டு நிக்க ஏலாது எல்லா சனத்தையும் ஒருங்கிணைத்து அவனோட முகாம் நோக்கி போனம் அங்க தம்பி அவங்கள் கூட முரண்பட்டு கொண்டு இருந்தான். விடுதலை செய்யவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன் என்று அவங்களுக்கு எச்சரிக்கை விடுத்தபடி இருந்தான் என்று நிமிர்ந்த அவர் விழிகளில் இருந்து நீர் வெளிவருவதை எம்மால் காணக்கூடியதாக இருந்தது.
புலிகளின் கொள்கைகளில் ஒன்று உயிருடன் பிடிபட்டால் உயிரை துறக்க வேண்டும் இதற்காக நஞ்சை அருந்த வேண்டும் என்பதற்கு உட்பட்டவனாக குப்பியை தனது வாய்க்குள் வைத்து கொண்டு இந்தியன் இராணுவத்தின் முன் எச்சரிக்கை விடுத்தபடி இருந்த அந்த உத்தமனின் சாவு மனித்துளிகளாக எண்ணப்பட்டுக்கொண்டிருந்தன அவனால் கொடுக்கப்பட்டிருந்த நேரக்கெடு முடிவடையும் முன் எமது மக்கள் ஆர்ப்பரித்த பேரலையாக இருந்த வேகம் கண்டு பயந்த இந்திய இராணுவம் அவனை விடுதலை செய்தது. இப்படியாக பல சந்தர்ப்பங்களை தன் உயிர் பிரியும் தருணங்களாக பெற்றிருந்தாலும். இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்திலும் மக்களின் நல்வழிப்படுத்தும் செயற்பாட்டிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து கொண்டான்.

தியாக தீபம் திலீபன் நல்லூர் முன்றலிலே உருகி கொண்டிருக்க கரவெட்டி பிரதேசத்தில் மாபெரும் மறிப்பு போராட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தி இந்திய இராணுவத்தை கிலி கொள்ள வைத்தான். வடமராட்சியில் நடைபெற்ற ஒவ்வொரு மக்கள் போராட்டங்களிலும் இவனது செயற்றிறன் முன்னிருத்தப்பட்டிருக்கும் என்பது இங்கு நாம் குறிக்கப்பட வேண்டிய முதன்மை செயற்பாடு.

ஒரு நாள் எதிரியின் முற்றுகைக்குள் அண்ணை நிக்கிறார் எங்களால எப்படி அவர வெளில எடுக்கிறது என்று தெரியாத நிலை
காலையில் இருந்து அவரது தொடர்பே இல்லை இராணுவ முற்றுகை விடுக்கப்பட்ட பின் எமது ஆதரவாளர்கள் வீடுகளில் எல்லாம் தொடர்பு கொண்டும் அண்ண எங்க என்று தெரியல்ல, அப்போது எமது
போராளி ஒருவன் தான் அவர் தங்கி இருந்த இடத்தை கண்டு பிடித்து அங்கு சென்றான். அவர் தாங்கி இருந்த இடம் ஒரு பெரிய வீட்டு கீழ் தளம் என்று நினைக்காதீர்கள். ஒரு வீட்டின் "மலக்குழி" என்று செங்கதிரின் போராட்ட வரலாற்றை திருப்புகிறார் அவர் கூட நின்ற
போராளி ஒருவர். உண்மையில் எமது ஒவ்வொரு போராளியும் எத்தகைய தியாகங்களை செய்து மடிந்திருக்கின்றார்கள் என்பது அவர்களது போராட்ட வரலாறுகள் புரட்டப்படும் போது தான் வெளிவரும் விடையங்களாக இருக்கின்றன. கொண்ட கொள்கைக்காக உயிரையே துச்சம் என்று மதித்து போராடிய போராளிகள் வரிசையில் அவர்களின் வீர வரலாறுகளும் நீண்டு கொண்டே செல்கின்றன.
ரஞ்சனுக்கு நண்டு என்றா ரம்ப விருப்பம் சட்டியோட வைச்சு சாப்பிடுவான்... என்று கண்கள் கலங்க தனது ஒன்றுவிட்ட சகோதரனது நினைவை சுமந்த அந்த சகோதரியின் விழிகளை எம்மால் பார்க்க முடியவில்லை. அவன் செத்து விட்டான் என்று கூட எம்மால் நம்ப முடியவில்லை அவன் நண்டு கறியுடன் வீட்ட சாப்பிட்டு 200 மோட்டார் சைக்கிளில போனது இப்பவும் எனக்கு நல்ல ஞாபகம். என்று முடிக்கிறார் அந்த தாய்.
அப்போது விடுதலைப்புலிகள் சிங்களத்துக்கு எதிரான இரண்டாம் கட்ட ஈழ போரை ஆரம்பித்த காலம் விடுதலைபுலிகளின் மத்திய குழு உறுப்பினராக்கப்பட்டு கொள்கை முன்னெடுப்பு பிரிவு பொறுப்பாளராக இருந்தான். ஈழ மண் எங்கும் சிங்களத்துக்கு எதிரான போராட்டங்கள் விரிவாக்கம் பெற்று இருந்த நேரத்தில் இவனது மக்களுக்கான போராட்ட கருத்தூட்டல் நடவடிக்கையும் ஈழ மண் முழுவதும் விரிவடைந்திருந்தது. தலைவரதும் எமது போராளிகளதும் கொள்கை சார்ந்த கருத்துக்களையும் சுமந்து கொண்டு ஈழம் முழுவதும் பயணப்பட்டான் செங்கதிர். கருவி ஏந்தி களத்தில் நின்றவன் சொற்கருத்து ஏந்தி மக்களை சந்திக்க புறப்பட்டான்.
20.02.1991 வீட்ட வந்து அத்தான் இந்த நாட்டுக்காக நீங்கள் என்ன செய்தீங்கள்...? என்ற வினாவை என்னிடம் கேட்டான். இதுவரை ஒரு ஆதரவாளராக, கவிஞனாக படைப்பாளனாக நான் இருந்தனே தவிர விடுதலை போராட்டத்தில் வேறெந்த பங்கும் எனக்கு இருக்க வில்லை என்பது உண்மையே... இவனது இந்த வினாவே இவன் வீரசாவுக்கு பின் என்னை விடுதலை போராளியாக மாற்றியது என்றால் அதி எந்த பொய்யும் இல்லை. என்று செங்கதிரின் மைத்துனன் தனது
உறவுகளை விட உன்னத இலட்சியமே முதன்மையானது என்ற இவனது நோக்கம் பற்றி விவரிக்கிறார்.
என் கூட 4 நாட்கள் முக்கிய வேலைகளை பகிர்ந்து கொண்டான் பல விவாதங்களில் ஈடுபட்டான். 24.02.1991 காலை புறப்பட்டு சென்றான். மீண்டு வரவே இல்லை. விழிமூடி தூங்கும் மேயர் செங்கதிர் தன் மனைவி கருவில் சுமந்த அந்த சிசு முகம் கூட பார்க்காது
விடுதலையின் வீச்சுக்காக தாண்டிக்குளம் மண்ணில் சரிந்தான் என்ற செய்தி மட்டும் தான் எமக்கு வந்தது.
அவன் கனவு என்றும் சுதந்திர தமிழீழம் என்பதாகவே இருந்தது. இன்று அவனும் இல்லை அவனது கனவும் நனவாகவில்லை மாவீரகள் கனவுகள் நனவாக்கப்பட வேண்டும் இன்றைய நிலையில் இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். அன்று செங்கதிர் தன் மைத்துனனை கேட்ட தமிழீழத்துக்காக நீங்கள் என்ன செய்தீர்கள் என்ற வினாவை எமக்கு நாமே ஒரு முறை கேட்டு பார்க்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஏனெனில் செங்கதிரின் கனவு நனவாக்கப்பட வேண்டும்.

# “வீழ்ந்து போன சமூகத்தை தூக்கி நிறுத்துகின்ற விடுதலையை அவாவுகின்ற படைப்புகளும் அவ்வப்போது வரத்தான் செய்கிறது”

**நேர்காணல் :ப.பார்த்தீபன்**




சமகாலத்தில் ஈழ இலக்கியகித்தில் இளம் படைப்பாளிகளையும்,அவர்கள் படைப்புக்களையும் முதன்மைப்படுத்தி காத்திரமான காருத்துக்கலந்துரையாடல் ஊடாக ஈழ இலக்கிய வழர்சியில் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கும்“**யாழ்.இலக்கிய க்குவிய” செயட்பாட்டாளர் ஜெ.வினோத்** உடனான மின் ஓர் நேர்காணல்.

**வணக்கம்**
**யாழ் இலக்கியக்குவியத்தின் செயற்பாடுகள், நோக்கம் என்ன என்பதை தெளிவு படுத்துங்கள்?**

இலக்கியகுவியத்தின் நோக்கம் ஈழத்தமிழிலக்கியத்தை வளமாக கட்டியெழுப்புதல் ஆகும் .திட்டமிட்டு அழிக்கப்படும் இனமொன்றின் குரல் உலக அரங்கில் ஓங்கி ஒலிக்கவேண்டுமெனில் அங்கு வளமான தொரு எழுத்து சூழல் இருக்கவெண்டும் அந்த வகையில் வளரும் எழுத்தாளர்களை ஊக்குவித்து மூத்த எழுத்தாளர்களது வழிகாட்டலில் ஆரோக்கியமான இலக்கியப் போக்கொன்றை வளர்த்தெடுப்பதே எமது பிரதான நோக்கம் ஆகும்.

**இலக்கியம் சார்ந்து நிறையவே அமைப்புக்கள் யாழில் இயங்கும் போதும்.யாழ் இலக்கியக்குவியத்தின் உருவாக்கம் எதற்காக?திட்டமிட்ட படி அதன் செயற்பாடுகள் இருக்கின்றதா?**
**இலக்கிய செயற்பாடுகளை வெறுமனே இலக்கியம் என்று ஒதுக்கிவிட முடியாது அதற்குள் ஒரு அரசியலின் இயக்கம் இயங்கும் அந்த வகையில் யாழ் இலக்கியகுவியத்தின் அரசியல் நிலைப்பாடு என்ன?**

இலக்கியம் சார்ந்து பல இலக்கிய அமைப்புக்கள் இயங்கினாலும் எல்லோரையும் இணைக்கத்தக்க குறிப்பாக வளரும் எழுத்தாளர்களை இனங்கண்டு ஊக்குவிக்க ஒர் அமைப்பு தேவை எனக் கருதினோம். அது மட்டுமன்றி காலத்தின் போக்கிற்கிணங்க இணையத்திலும் செயற்படவேண்டிய தேவை இருந்ததால் முகநூலூடகவே எமது அமைப்பை ஆரம்பித்தோம். செயற்பாடு கருதி அது பின்பு தூல அமைப்பாக்கபட்டது.

அரசியல் நிலைப்பாடு பற்றிகேட்டிருந்தீர்கள் தமிழருடைய இருப்பு அவர்களுடைய உரிமை சுதந்திரம் என்பவற்றிற்கு ஆதரவாக தமிழ்த் தேசியத்துக்கு உட்பட்டு செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் இலக்கிய ரீதியாக சேர்ந்தியாங்குதல் எமது அரசியல் கொள்கையாகும்.

**யாழ் இலக்கியக்குவியம் என்ற பெயரில் பிரதேச அடையாளம் பிரதிபலிக்கின்றது.இதன் தாக்கம் அமைப்பின் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துமா?**
யாழ் இலக்கியக்குவியத்தில் உள்ள யாழ் என்பது அது இயங்குகின்ற இடத்தை குறிப்பது மட்டுமே மேலும் பிரதேச குழு நிலைப்பட்ட வாதங்களை பரந்த இலக்கிய சிந்தனையூடாக மாற்றமுடியும் என இலக்கியக்குவியம் கருதுகிறது. சிலரால் இது சுட்டிகாட்டபட்டிருப்பினும் இலக்கியம் என்ற பொது வெளியில் பிரதேச வேறுபாடற்ற செயற்பாட்டையே நாம் விரும்புகிறோம். இதை இலக்கிய நண்பர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்.

**யாழில் இலக்கியம் சார்ந்து இளைஞர்களின் செயற்பாடும் சமூக அக்கறையும் எவ்வாறான நிலையில் உள்ளது?**

ஒரு சில இளைஞர்களே இலக்கியம் சார்ந்து செயற்படுகிறார்கள். இது தற்போதய நிலை மட்டுமல்ல முன்பும் இப்படிதான் சரியான வழிப்படுத்தலின்மை சமூக தேச நலனில் அக்கறையில்லாத ஆட்சியதிகாரம் திட்டமிட்டகலாச்சார அழிப்பு போன்றவற்றால் இளைஞர்களின் சமூக அக்கறையும் குறைவடைந்தே உள்ளது. இவ்விடத்தில் தான் கலாசாரவிழுமியம் மிக்க சமூகமொன்றை கட்டியெழுப்புவது படைப்பாளிகளின் கடமையாகிறது

**ஈழத்தில் அண்மைக்காலமாக தமிழர் பண்பாட்டு வாழ்வியல் முறையில் ஏற்பட்ட திடீர்மாறுதலை எவ்வாறு இலக்கியக்குவியம் பார்க்கின்றது? அதற்கான காரணங்கள் எதுவாக இருக்கலாம் என்று நினைக்கின்றீர்கள்?**

தற்போதுள்ள அரசியல் ஸ்திரமற்ற ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்படும் இளைஞர்களுக்கான சரியான அரசியல் வழிகாட்டலின்மை, எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மை, போரும் வன்முறையும் ஏற்படுத்திய மன வடுக்கள், திட்டமிட்ட கலாச்சார அழிப்பு (போதைவஸ்துக்கள் விநியோகம்,தென்னிலங்கை விபச்சாரிகளின் தமிழர் பிரதேச வருகை போன்றன) இவையெல்லாம் எமது சமூகத்தில் வக்கிர மனநிலையாளர்களை உற்பத்திசெய்கிறது. இத்தகைய புறக்காரணிகளே ஈழத்தில் தற்போது தோற்றம் பெற்றுள்ள வன்முறைக் கலாசாரத்துக்கான தூண்டற்பேறுகளாகும். சமூக ஒற்றுமை, நீதிக்காக திரண்டுபோராடுகிற தன்மை, என்பன வலுப்பெறும் போது அதாவது மக்களே தீர்ப்பாளர்களாக மாறுகின்றபோது இவை-குறைய வாய்ப்புண்டு இது தொடர்பாக சமூக விழிப்புணர்வு செயற்பாடுகள் பல முன்னெடுக்கப்படவேண்டும் எனக் கருதுகிறோம்.

**2009மே 18க்கு பிறகான படைப்பாளிகளின் நிலை பற்றி அறியத்தாருங்கள்?**

**அவர்கள் படைப்புக்கள் சமூகமாறுதலுக்கும் விடுதலைக்கும் உந்துதலாக அமையுமா?**

போராட்டம் தோல்வியுற்றது பற்றிய படைப்பாளிகளின் ஆதங்கம் அநேக படைப்புகளில் தெரிகிறது. போராட்டம் தோற்றதாயின் அதற்கான காரணங்களை கண்டறிவதற்கான சுயவிசாரணை என்பனவே இதற்கு பின்னான இலக்கியங்களில் அவரவர் தளம் சார்ந்து அதிகம் பேசப்படுகின்றது.

வீழ்ந்து போன சமூகத்தை தூக்கி நிறுத்துகின்ற விடுதலையை அவாவுகின்ற படைப்புகளும் அவ்வப்போது வரத்தான் செய்கிறது . வெளிவரும் எல்லாப் படைப்புகளும் சமூக மாறுதலை ஏற்படுத்த வல்லன எனக்குறிப்பிட முடியாவிட்டாலும் சில படைப்புகள் இளைஞர்களுக்கு போரினால் ஏற்பட்ட மன அழுத்தங்களில் இருந்து அவர்கள் விடுபட ஏதுவாக அமைகின்றன.



**சமகாலத்தில் குழந்தை இலக்கியங்களின் வரவு பற்றி அறியத்தாருங்கள் தவறின் அதற்கான காரணங்கள் எதுவாக இருக்கும் என்று எண்ணுகின்றீர்கள்?**

தற்போது குழந்தை இலக்கியத்தின் வரவு மிகக்குறைவாகவே உள்ளது. வாழ்கை போராட்டமும் பொருளாதார நெருக்கடி நிறைந்ததாகவும் இருப்பதால் குழந்தைகளை கொண்டாடுகின்ற இலக்கியங்களின் வரவு குறைந்திருக்கலாம் வருகின்ற ஓரிரு படைப்புகளும் தரமாக அமைவதில்லை காரணம் குழந்தைகளின் உளவியலைப்புரிந்து அவர்களுக்கான எளிமையான ஓசை அமைப்பை விளங்கிக்கொண்டு எழுதுபவர்கள் மிகக்குறைவாகவே இருக்கிறார்கள் இசை-யோடு கூடி அசையக்கூடிய ஓசைசார்ந்த கவிதைகளை தேர்ச்சி பெற்றவர்களாலேயே எழுதமுடியும் எனக் கருதுகிறோம் .

**கொள்கை முரண்களுக்கப்பாலும் இலக்கிய சந்திப்புக்களில் எழுத்தாளர் உறவு நிலை எவ்வாறு உள்ளது?**

இது அவரவர் தளம் சார்ந்தது ஆயினும் முரணே வாழ்க்கை என்பதால் கருத்துவேறுபாடுகள் இருப்பினும் எழுத்தாளர்கள் இலக்கியத்திற்காக இணைகிறார்கள் நட்பான ஒருசூழலே உள்ளது.

**தொடர்ந்து முகடு இதழ் ஊடாக இலக்கியக்குவியம் மக்களுக்கு தெரியப்படுத்த நினைப்பது என்ன?**

வளரும் இலக்கியவாதிகளை நீங்கள் ஊக்குவிக்கவேண்டும். முகடுபோன்ற சஞ்சிகைகளின் தொடர்வருகையை நீங்கள் உறுதிபடுத்தவேண்டும் அரசியல் கருத்துவேறுபாடுகள் இருப்பினும் அவற்றைப் புறந்தள்ளி நமது தமிழ் இலக்கியவளர்ச்சிக்காக அனைவரும் உழைக்கவேண்டும்.

# சிங்கள தேசம் தமிழர்களுக்கு ஒரு நீதியான தீர்வை எப்போதும் தரமாட்டாது

அ.மயூரன்
லண்டன்.

"**சர்வதேச** விசாரணையை அனுமதிப்பது என்பது இலங்கையின் நீதித்துறையை அவமதிப்பதாக அமையும். எனவே ஒரு

போதும் சர்வதேச விசாரணையை ஏற்றுக் கொள்ள முடியாது" என 2015 ஜனவரி 8 யும் திகதி எலக்சனில் வென்றதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

தமிழ்மக்கள் எந்தவொரு சிங்கள அரசாங்கத்தையோ அல்லது எந்தவொரு சிங்கள தலைவர்களையோ நம்ப எந்தவொரு ஆதாரமும், நம்பிக்கையும் கிடையாது. குறிப்பாக இன்றைய இலங்கை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய அரசியல் காலங்களில் உண்மையாக எப்பவுமே நடந்ததோ நீதியாக வாழ்ந்தவரோ கிடையாது. ஏன் 2000 ஆம் ஆண்டு சந்திரிக்கா ஆட்சியிலிருந்தபோது தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒற்றையாட்சி முறைமூலம் தீர்க்க முடியாது எனவே பிராந்தியங்களின் கூட்டாட்சி முறை மூலம் இனப்பிரச்சனைக்கான தீர்வினைக் காணவேண்டும் என்கின்ற ஒரு திட்டத்தை இலங்கை நாட்ளுமன்றத்தில் முன்வைத்தபோது அதை முதலாளாக நின்று எதிர்த்து அத்திட்ட நகலைக் கிழித்து எறிந்தார். இதை அப்போதைய ரூபவாகினி தொலைக்காட்சியும் ஒளிபரப்பியிருந்தது.

இவ்வாறு தீர்வுத்திட்ட நகலைக் கிழித்து எறிந்த ரணில் விக்கிரமசிங்கவிடம் எவ்வாறு தமிழ்மக்களோ, தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ நீதியான உள்ளக விசாரணையின் தீர்வினை எதிர்பார்க்கமுடியும்.

ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி காலத்தில் சிங்கள இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட ஜே.வி.பி.யினரான சிங்கள இளைஞர்களின் படுகொலை புதைகுழியான சூரியகந்த புதைகுழி விசாரணையை சந்திரிகா அரசாங்கம் நடாத்தியது. இராணுவத்தால் சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்காக இன்னொரு சிங்கள அரசாங்கம் விசாரணை நடத்தியிருக்கிறது. ஆனால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமைக்காக இதுவரை எந்தவொரு சிங்கள அரசாங்கங்களும் விசாரணை நடத்தி நீதி வழங்கியது கிடையாது இதுதான் சிங்கள தேசத்தின் கடந்தகால வரலாறு எனவே உள்ளகப் பொறிமுறை மூலம் விசாரிக்கப்படும் உள்ளக விசாரணை சர்வதேச விசாரணையை தடுத்து நிறுத்தும் சிங்களத்தின் உத்தியே

இதேபோல் 2009ஆம் ஆண்டு இறுதிவரை யுத்தத்தை தலைமைதாங்கி ஒன்றரை இலட்சம் தமிழ்மக்களை முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்த இலங்கை இராணுவ தலைமை தளபதி பொன்சேகாவுக்கு இராணுவ வெற்றியை ஈட்டியதற்காக

சிறிசேன - ரணில் அரசாங்கத்தால் 'ஃபீல்டு மார்ஷல்' பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டமையானது இனப்படுகொலைக்கு வழங்கப்பட்ட அங்கீகாரமே ஆகும் இப்படிப்பட்ட ரணிலின் அரசாங்கத்திடம் எப்படி நீதியான உள்ளக விசாரணையை நாம் எதிர்பார்க்க முடியும்.

எனவே தமிழருக்கு எதிரான கடந்தகால சிங்கள ராஜதந்திர நகர்வுகளைத் புரட்டிப்பார்த்தால் இது புரியும்.

1949ஆம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்க அரசாங்கத்தினால் கல்லோயாவில் குடியேற்றப்பட்ட சிங்கள காடையர்கள் 1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்க அரசாங்கத்தின் போலீஸ் உதவியுடன் கல்லோயாவில் ஆண், பெண், சிறுவர்கள் உட்பட 156 தமிழ் விவசாயிகளை இனப்படுகொலை செய்தனர். அதாவது 1956, யூன் 5ஆம் தேதி கத்தி, கோடரி, இரும்பு கம்பிகள் சகிதம் தமிழ் மக்கள் சிங்கள காடையர்களால் இங்கு படுகொலை செய்யப்பட்டனர். இதற்கான விசாரணை எதுவும் இதுவரை நடந்தது கிடையாது. இதற்கான

நீதியோ, நிவாரணங்களோ இதுவரை வழங்கப்பட்டது கிடையாது.

அதேபோல் 1958ஆம் ஆண்டு இனக் கலவர வடிவில் நிகழ்ந்த இனப்படுகொலை பற்றிய விபரங்கள் TARZIE VITTACரஜ எழுதிய EMERGENCY'58 என்ற நூலில் முழுமையாக உள்ளன. குறிப்பாக 1958, மே 25ஆம் தேதி கிங்குராங்கொட என்ற இடத்தில் சிங்களக் காடையர்கள் ஒரு கர்ப்பிணித் தமிழ்ப் பெண்ணின் வயிற்றைப் பிளந்து அச்சிசுவை வெளியே வெட்டி எடுத்து கூத்து கும்மாளம் போட்ட காட்சி இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. (பக்கம் 38-43) அப்போதைய நாடுதழுவிய இந்த இனப்படுகொலை கோரத்தாண்டவங்கள் பற்றி இதுவரை சிங்கள நீதித்துறையோ, அரசாங்கங்களோ விசாரணை நடாத்தியது கிடையாது.

மேலும் 1977ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அதுவும் ரணில் அமைச்சர் பதவி வகித்த ஜெயவர்த்தன தலைமையிலான ஐதேக அரசாங்கம் நாடு தழுவிய இனப்படுகொலையை தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த ஒரு களியாட்ட விழாவின் போது எந்தவித காரணமுமின்றி உள்நுழைந்த சிவில் உடை தரித்த சிங்கள போலீசார் கண்மூடித்தனமாக அங்கு திரண்டிருந்த தமிழ் மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டதோடு நாடு தழுவிய தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டது. இதற்கான எந்தவொரு நீதி விசாரணையை இதுவரை நடந்தது கிடையாது.

ஆனால் உலகத்தை ஏமாற்றுவதற்காக ஏன் கலவரம் நிகழ்ந்தது பற்றிய ஒரு விசாரணை நடாத்துமாறு சஞ்சோனி கமிஷன் விசாரணை ஒன்று நிகழ்ந்தது. இது குற்றவாளிகளை கண்டுபிடிப்பது பற்றியதோ அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான விசாரணையோ அல்ல. ஆயினும் அந்த விசாரணையின் அறிக்கைகூட இதுவரை வெளியிடப்படவில்லை.

ஏன் 1981ஆம் ஆண்டு யாழ் நூலகம் எரிக்கப்பட்டமையும் போலீஸ் மற்றும் இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் புரியப்பட்ட படு

கொலைகளும். இந்த நூலகத்தை எரிப்பதற்கு கொழும்பில் இருந்து இரண்டு பேருந்துகள் மூலம் அமைச்சராய் இருந்த காமினி

திசநாயக சிங்களக் காடையர்களை அழைத்துவந்து அவரே நேரில் நின்று நூலகத்தை எரிப்பித்தார். இதில் போலீசாரும், இராணுவத்தினரும் உதவிபுரிந்தனர்.

நூலகம் ஒருபுறம் எரிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை மறுபுறம் போலீசாரும், இராணுவத்தினரும் யாழ் நகரத்தில் பொதுமக்களை கண்டபடி சுட்டுக் கொன்றனர். இதன்போது யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த யோகேஸ்வரனின் வீடு இராணுவத்தினரால் தாக்கி அழிக்கப்பட்டது. இவை எதற்குமான

எந்தவொரு விசாரணையையும் ரணில் அமைச்சராய் அங்கம் வகித்த ஐதேக அரசாங்கம் இதுவரை விசாரணை செய்தது கிடையாது. கொல்லப்பட்ட யாருக்கும் எந்தவொரு நீதியோ,
நியாயமோ,
நிவாரணமோ வழங்கியது கிடையாது.
ரணில் இப்போது கூறும் சிங்கள நீதித்துறையின் கௌரவம் இனி எங்கிருந்து வரப்போகிறது?
மேலும் 1981ஆம் மலையகத்தில் ஐதேக காடையர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவர வடிவிலான தமிழினப் படுகொலைக்கான எந்தவொரு விசாரணையையும் ஐதேக அரசாங்கமோ அன்றி பின் பதவிக்கு வந்த அரசாங்கங்களோ செய்தது கிடையாது.
மெலும் சிங்களச் சிறைச்சாலையில், 1983, யூலை 24ஆம் தேதி வெலிக்கடைச் சிறையில் குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 தமிழ்க் கைதிகள் சிறைச்சாலை காவலர்களின் உதவியுடன் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர். அதுவும் காவல் நிறைந்த சிங்கள சிறைச்சாலையில் நிகழ்ந்த இந்த படுகொலை பற்றி ரணில் அமைச்சர் பதவி வகித்த ஜெவர்த்தன அரசாங்கம் எந்த விசாரணை-யையும் செய்தது கிடையாது.
1983 கறுப்பு யூலை இனப்படுகொலை உலகம் அறிந்த ஒன்று. இந்த இனப்படுகொலைக்கு ஐதேக அரசாங்கமே காரணம் என்றும் அதுபற்றி தெளிவான விபரங்களை Tu;E u;OLOCAUST AND AFTER என்ற தனது பிரபலம் மிக்க நூலில் எல்.பியதாச (L.PIYADASA) ஆதாரபூர்வமாக விவரித்துள்ளார். அதில்
ஐதேக-வில் கைத்தொழில் அமைச்சராக இருந்த சிறில் மத்தியூ மற்றும் மகாவலி அமைச்சராக இருந்த காமினி திசநாயக உட்பட பல அமைச்சர்களின் பெயர்களை குறிப்பிட்டு அவர்கள் படுகொலைக்கு தலைமை தாங்கிய இடங்களையும் மற்றும் விவரங்களையும் அந்நூல் தெளிவாக விவரிக்கிறது. இந்நூல் ஆசிரியர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவரும் பேராதனை பல்கலைக்கழக நூலகத்தின் பிரதம நூலகரும் ஆவார். இந் நூல் எழுதியதற்காகவே இவரது வீடும் தாக்கப்பட்டு இவர் நாட்டை விட்டு வெளியேறி இலண்டனில் குடியேறினார். இத்தகைய படுகொலைகள் பற்றி விசாரணை நடத்தாத சிங்கள அரசாங்கங்களும், நீதித்துறையும் நீதி வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.
சந்திரகாவின் ஆட்சிக்காலத்தில் கோணேஸ்வரி பாலியல் வல்லுறவு படுகொலையில் சிங்களப் படையினர் ஈடுபட்டனர். அவரது பெண் உறுப்பில் கைக்குண்டு வைத்து வெடிக்கச் செய்து படையினரால் கொல்லப்பட்டுள்ளார். இந்த அபகீர்த்தி மிகுந்த, வெட்கக் கேடான
படுகொலை பற்றி யாரும் இதுவரை விசாரணை நடத்தியது கிடையாது.
அத்துடன் மேலும் 1996ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் செம்மணியில் 600 மேற்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இராணுவத்தினரால் சுட்டு புதைக்கப்பட்டுள்ளனர். அதுவும் 1995ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் யாழ்குடா நாடு முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபின் இந்த இனப்படுகொலை நிகழ்ந்துள்ளது. இதுபற்றி சந்திரகாவோ,
ரணிலோ விசாரணை என்ற வார்த்தைத்தானும் பேசியது கிடையாது.
அனைத்துப் படுகொலைகளினதும் உச்சக் கட்டமாக 2009ஆம் ஆண்டு குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியோர்கள் உட்பட ஒன்றரை இலட்சம் தமிழ்மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதுபற்றிய நம்பகமான தகவல்களை
சேனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ளதுடன் ஐநா அறிக்கையும் நாற்பதாயிரத்திற்கும் மேல் மக்கள் படுகொலை செய்யப்பட்டதை கூறுவதுடன் இத்தொகை மேலும் அதிகமாக இருக்கக்கூடும் என்றும் கூறியுள்ளது.
இவற்றுக்கு சர்வதேச விசாரணையை கோரிய அமெரிக்க அரசு தமிழ் மக்களை ஏமாற்றாது அதனை செய்ய வேண்டும்.
பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் எழுதிய Break up of Srilanka என்ற தனது நூலில் டீநகழசந வாந ஊளைடை றுயச என்ற அத்தியாயத்தில் இலங்கை நீதித்துறையின் அபகீர்த்திக்குரிய தகவல்களை ஆதாரத்துடன் கூறியுள்ளார். மேலும் இரு மூத்த சிங்கள அமைச்சர்கள் தமக்குத் தேவைப்படும், தமக்கு வேண்டியவாறான தீர்ப்புக்களை இலங்கை உயர்நீதிமன்ற நீதிபதிகளிடம் இருந்து எவ்வாறு பெறமுடியும் என்பதை ஏ.ஜே.வில்சனிடம் அதுவும் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கூறியுள்ளதை விவரித்துள்ளார். சிங்கள நீதித்துறையை நம்புவதற்கு எந்தவித நியாயமும் கிடையாது.
நேரடியானதும், முழுமையானதுமான சர்வதேச விசாரணையின்றி வேறு எந்த விசாரணையாலும் இனப்படுகொலைக்கு உள்ளான தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்க முடியாது. அமெரிக்கா தான் முன்மொழிந்தது போல் சர்வதேச விசாரணையை முன்னெடுக்கப்போவதா அல்லது நீதியை புதைக்கக்கூடிய களங்கப்பட்ட வரலாற்றையே கொண்டுள்ள ரணிலின் நீதியை புதைப்பதற்கான செயலில் ஒத்துழைக்கப் போகிறதா?
ஜனநாயகத்தின் பிறப்பிடமாக, நீதியின் காவலனாக தன்னை பிரகடனப்படுத்தும் அமெரிக்கா ஈழத்தமிழ் விடயத்தில்
நீதியின் பெயரால் சர்வதேச விசாரணையை மட்டுமே முன்வைக்க வேண்டும். இதுவே தமிழ் மக்களிடம் தேர்தலுக்கு முன் அமெரிக்காவின் வாக்குறுதியாக இருந்தது. இதன் அடிப்படையிற்தான் தமிழ்த்
தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களிடம் வாக்குறுதியை முன்வைத்தது. தேர்தலின் பின் சிங்கள ஆட்சியாளர்கள் போல் நா பிறழ்ந்து நிக்கிறது தமிழ்மக்களின் பால் இவர்கள் உண்மையாகவும், நேர்மையாகவும் இருப்பார்களாயின் ஜனநாயக வழியில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு மகாணசபைகளுக்கான பதவிகளில் இருந்தும், நாடாளுமன்ற
பதவிகளில் இருந்தும் விலகிக் கொள்ள வேண்டும் அல்லது சர்வதேச சுயாதீன விசாரணை வேண்டுமென ஐநாவை பகிரங்கமாக வேண்டவேண்டும்.
அத்துடன் மக்களும் நாடுதழுவிய ரீதியில் அமைதியான வழியில் தொடர்ச்சியான குழற்சி முறையிலான உண்ணாவிரதத்தினையோ, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினையோ உடனடியாக நடத்தி இழைக்கப்பட்ட படுகொலைகளுக்கு நீதியானதும், நடுநிலையானதுமான சர்வதேச விசாரணையை வலியுறுத்த வேண்டும்.
இத்தகைய பின்னணியில் உலகின் பாரிய அரசியல் மாற்றங்களும் சமூகவியல் மாற்றங்களும் நிகழ்ந்துவிட்டன ஆனால் சிங்களதேசத்தின் அரசியலிலும், சமூகவியலிலும் ஏன் நீதித்துறையிலும் எந்த மாற்றங்களும் நிகழவில்லை அது எப்போதும் இனவாதச் சிந்தனையிலேயே வளர்க்கப்பட்டு திரண்டு முற்றிப்போய்க்கிடக்கிறது. ஆகவே இனியும் சிங்கள நீதித்துறையில் நீதி என்பது தமிழர்களுக்குக் கிட்டப்பேவதில்லை அப்படியொரு
நீதியை எதிர்பார்ப்பது வடிகட்டிய முட்டாள் தனமே இதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எப்படி ஏற்கப்
போகிறது?

# போரிலிருந்து போரை நோக்கி

அகரமுதல்வன்

யாரும் அறியா வண்ணம்
நானொரு துவக்கை செய்திருந்த போது
பயங்கரத்தின் இயற்கையில் குழைந்திருந்தேன்
மூச்சுத் திணறும் வாக்கியத்தில்
அஞ்சலிக் கூட்டம் காத்திருந்தது
மிக மெதுவாக எல்லாப் பிரச்சனைகளும்
துவக்கின் முன் அறிக்கையிடப்படுகிறது
நான் இனி அழப்போவதில்லை
அவலம் நீத்து போர் நிழலில் இளைப்பாற
உயிர் பிழைத்த மரத்தை தேடும்
என் அசைவுகளில் அர்த்தமான துயரங்கள்
என்னைத் தழுவும் அபத்தக் காற்றில்
நாளை முறியும் சத்தம்
சுழன்று கேட்கிறது
அந்த யுத்தம் இன்றில்லை
நிலத்தில் சாம்பலாகச் சவங்கள்
பிறக்கப் போகும் யுத்தத்தை ஆராதிக்கும்
பாடல்களை எலும்புகளால்
எழுதிக்கொண்டிருக்கிறார்கள்
மூழ்காத வரலாற்றில் உப்பரித்த
குழந்தைகளின் காலடியில்
கரிந்து கிடக்கும் மரணத்தை
மறுபடியும் பார்த்தேன்
சன்னங்கள் கிடந்தன
நெல்லின் விளை நிலத்தில்
சன்னங்களை அறுவடை செய்யும் தாயகத்தில்
சூரியன் மறைவதற்கு கடலிருக்கிறது
நான் விரும்பா துயர்களைக் கொண்டது
நான் திறக்காத கதவுகளைக் கொண்டது
என் வாழ்வே வன்மம் கொண்டது
துவக்கின் முதல் சன்னம் பாய்வித்த கணத்தில்
மாபெரும் வலியை கட்டவிழ்த்தேன்
சன்னங்கள் போகப் போக
வசந்தகாலத்தின் வாசம் என் காயங்களில்
வீசத்தொடங்குகிறது
என் புதைகுழிக்கு முதல் மண்ணை
மண்வெட்டி போட முன்னே
என்னுடைய தேகத்திலிருந்து
சன்னங்களை எடுத்துக் கொள்வான்
மிஞ்சியிருக்கும் இன்னொரு அதிஸ்டசாலி.



# தாய்மை



தாய்மை “ பெண் ”அவள் “ பேரழகி ”
அவள் “ நிலவு ” அவள் “ நெருப்பு ”
அவள் “ பூ ” அவள் “ புயல் ” அவள்,

பல நூறு வர்ணனை வைத்தார்
பருவத்தில் என்னை என் - தோற்றத்தில்
மயில் தோகையில் வைத்தார் அன்று.

காலத்தை தாண்டி நான் ஒருநாள் ,
கை பிடித்தேன் ,
பிடித்தவனை என் கட்டிலில் அணைத்தேன்,
என் இதயத்தை கொடுத்து அவன் உதிரத்தை ஏற்றேன்.
ஓர் துளி வடிவில் ஓர் உயிராக வந்தாய்,
வந்து என் கருவறை சேர்ந்தாய்.

தொன்னூறு நாள் கடந்து - என்
தோற்றத்தில் சொன்னாய்,
“ பெண் ” என்ற என்னை
“ தாய் ” என்று அன்று.
ஆயிரம் வர்ணனைகளும்
அரைநொடியில் தோற்றது - நீ என்னை
“ தாய் ” என்ற போது.

என்னுள்ளே நீ வந்த நாள் தொட்டு
எனை மாற்றிக் கொண்டேன்
நாளாக நாளாக , என்
நடை மாற்றிக் கொண்டேன்
அடி வயிற்றில் ஓர் வலி கூட
அதிசயம் இருந்தது.

இனிப்புக்கும் கசப்பிற்கும்
இடைவெளி மறந்தது
பார்க்கும் பொருள் எல்லாம்
பாசத்தை சொன்னது
கேட்கும் இசைகூட
உன் விருப்பம் கேட்டது

நீ வரும் நாள் பார்த்தே
நாட்காட்டி நகர்ந்தது - என்
நாட்களும் நகர்நதது.

உலகமே எனக்குள்ளே உருள் வதாய்
உன் உருளல்கள் சொன்னது,
உன் உதைப்புகள் சொன்னது.
“பாரம்மா பாராம்மா” என்று நீ
பாடி ஆடும் ஆட்டம்
நான் மட்டும் அறிந்தது,

நயமாக இருந்தது.
உனக்கான மூச்சை நான் வாங்க
எனக்கான இதயமாய நீ துடித்தாய்
அங்கே ,
எனக்குள்ளே நீ இருந்து
எனை நீ இயக்கியது
யாரும் அறியாதது
நீ மட்டும் அறிந்தது.

“ தாய் ” என்று நீ அழைத்தாய்
எனை இயக்கும் தாயாக நீ மாறி,
என் தாய் நீ என்பதால் - அங்கே
“ சேய் ” ஆகிப் போனேன் நான்.
உலகமே உனைப் பார்த்து
“ சேய் ” என்ற போது நான் மட்டும் சிரிப்பேன் - இது
நீ மட்டும் அறிந்தது.

முன்னூறு நாள் கடந்து
முன்னூறு வலி சுமந்து
கண்ணே ,
நான் உன்னை உந்தி தள்ளிய போது.......

உயிர், வலி அறியவில்லை..!!!
விழி கூட அழ விரும்பவில்லை..!!
இருந்தும்,
கண்ணில் நீர் கசிய
உயிர் நரம்பறுத்து..,
என் உலகமே இருண்டது.,!!

“ நான் ” என்ற ஒன்று - அங்கே
“ நீ ” ஆக வந்தாய் - மறு கணமே
தொப்புள்க்கொடி அறுத்து
இருவேறு உலகானோம்.,

அங்கே,
வெட்டப்பட்டது வெரும் தசை பிண்டமென்று
நீ என் முளை தொட்டு உதிரம் வாங்கிச் சொன்னாய்.
மீண்டும்
நாம் இருவரும்
ஓர் உலகானோம்.
நான் “ சேய் ” ஆனேன் - நீ ,
எனை இயக்கும் “ தாய் ”ஆனாய்.
எனக்கு “ தாய்மை ” நீ தந்தது .

து.தயாளன்

# பயணமுகவர்

ச.பிரபு

**என்னையும்** அப்பாவையும் பிரித்தது விதியின் செயலா? இல்ல கூடவே அமர்ந்திருக்கும் இருவருமா? என்று வாகன நெரிசலில் கோலாலம்பூரே ஸ்தம்பித்திருந்த வேளை பெட்ரோனாஸ் முன் நின்றிருந்த காரில் இருந்தவாறே விம்மிக்கொண்டிருந்தாள் சிவந்தி. உலகில் செயற்கைகள் கூட எவ்வளவு சுதந்திரமாக கைகோர்த்து நிற்கின்றன, இந்த மானிட சமுதாயத்திற்கு மட்டும் இது விதியா? இல்லை சதியா? என்று மலேசியாவின் அதிசய பெட்ரோனாஸ் இரட்டைக்கோபுரத்தைப் பார்த்து இரண்டும் ஒன்றை ஒன்று ஒட்டாவிட்டாலும் இரண்டையும் இணைத்து "இரட்டை" என்னும் அடைமொழி தந்திருக்கும்
மானிடம் என்னையும் அப்பாவையும் ஏன் பிரித்தார்கள் இவர்கள்? இவர்களுக்கு அப்படி என்னிடம் இன்னும் என்ன வேண்டும்? மனதில் கேள்விகளை ஓடவிட்டாள்.

வாகன நெரிசல் குறைய கார் விரைவுப்பாதையில் மலாக்கா நோக்கி பறந்தது. சுமார் நான்கு மணிநேரம் காற்றில் கரைய மலேசியாவின் அரண்மனை நகரம் இவர்களை வரவேற்றது. கார் விரைவுப் பாதையிலிருந்து விலகி அடர்ந்த காடுகள் இருமருங்கிலும் நிறைந்த குக் கிராமப் பாதையில் சென்றது.
சிறிது நேரத்தில் இது தனியாருக்குச் சொந்தமானது என்
மலாயில் குறிப்பிடப்பட்ட பாதையில் சென்று பாதையின் முடிவில் இருந்த இருண்ட பங்களாவை அடைந்தது. கதவைத் திறந்து ஓடியவள் ராசண்ணா…

என்று ஓலமிட்டவாறே பங்களாவின் வேலைக்காக அடிமையாக்கி வைக்கப்பட்ட சீவனிடம் தஞ்சம் புகுந்து தன் ஒப்பாரியைத் தொடர்ந்தாள். ராசுவும் வாய் பேசாத ஊமையாய் அவளைத் தேற்றினார்.

காரில் இருந்து இறங்கிய ரகுவும் அவன் நண்பனும் தமது வழமையான பாணியில் பங்களாவின் உள் நுழையாமல் பூமியை இருள் கௌவிக்கொண்டிருந்த வேளை பங்களாவின் வளவில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒரு மேசைக்கு நான்கே நாற்காலிகள்தான் என வரையறுக்கப்பட்டாற்போல் இருந்த அவர்கள் அன்றாட இருப்பிடத்திற்குச் சென்றான். இருள் சூழ்ந்த பங்களாவின் ஒரு மூலையில் மட்டும் ஈசல்களின் தொல்லையில் விட்டுவிட்டு மின்னும் தெருவிளக்கைப் போல இன்றைக்கோ நாளைக்கோ என் ஆயுள் முடிந்துவிடும் என்றெண்ணி ஈசல்கள் சூழ்ந்தும் தன் மீதமுள்ள உயிர்ப்பினால் விட்டுவிட்டு மின்னிக்கொண்டிருந்தது அந்த மின்குமிள். அந்த மின்குமிளின் சாயம்போன ஒளிதான் இந்த மேசைக்கும் நாற்காலிக்கும் பல இராக்காலக் கதி. தூசு படிந்த மின்குமிளின் வெளிச்சத்தில் சற்றே தடுமாறி அமர்ந்தான் ரகு. சுற்றுமுற்றும் பூச்செடிகளும் புட்தரைகளுமாக அமைந்த பூந்தோட்டத்தின் நடுவே அவர்களின் அன்றாட மதுக்கடை. அங்கிருந்த நால்வரில் ரகுவிற்கு மட்டும் சுயமரியாதை மற்றமூவராலும் கிடைக்கும் தற்காலிக மதுக்கடையில் கூட. ரகுதான் இந்த இருவரையும் சிவந்தி போன்ற இன்னும் இருள் பங்களாவில் அடைக்கப்பட்டு இருக்கும் சில உறவுகளையும் மேற்குலகம் என்னும் பணாதிக்க நாடுகளுக்கு சட்டவிரோதமாக அனுப்பிவைக்கும் ஏஜென்சி. அவருக்கு மரியாதை இருக்கத்தானே செய்யும்?

இவன் பெரும் பலசாலியோ, திடமானவனோ, வயது முதிர்ந்தவனோ அல்ல! மனிதன் ஆறடி உயரம் இவனைக் கண்டே கணித்துள்ளார்கள் போலும். எலும்புகளையும் நரம்புகளையும் மூடிச் சுற்றிய தோலைத் தவிர வீணான
சதைகள் இல்லாத ஒட்டிய தேகம். புனிதத்தின் நிறம் வெள்ளை என்று தான் புனிதன் என நினைத்து கிழக்குச் சூரியன் மேற்கில் உதித்தாலும் அவன் நிறம் மாற்றாத வெள்ளை மேற்சட்டை, கீழங்கி மட்டும் ஒவ்வொரு சந்திப்பிற்குமான நிறமாற்றம். என்றும் நிறம் மாற்ற நினைக்காத கறுப்பு நிற உயர்தர லெதர்க் காலணி, இடதுகையில் தங்கமுலாம் பூசிய கடிகாரம், வலதுகை உண்பதற்கு மட்டுமே இடைவெளி மறுவேளை இரு விரல்களின் இடையில் அகப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவிக்கும் வெண்பஞ்சு
சிகரெட். அது தன் ஆயுள் முடிவது கண்டு புகையாலே கண்ணீர் வடிக்கும். வெண்பஞ்சின் கண்ணிர்ப் புகையால் சூழ்ந்து அந்த இடமே பாழடைந்து காணப்பட்டது.

தடுமாறி அமர்ந்தவன்,
"மாறன்…. மாறன்……"
ஓம் அண்ண சொல்லுங்கோ?
மாறன் அந்தப் பெட்ட அவளின்ர அப்பாவ எரிச்ச நேரத்தில இருந்து இன்னும் நிப்பாட்டாம அழுகிறாள், நான் வேணுமெண்டு அந்தக்

காரியத்த செய்யேல்ல. நீங்கள் வெளிநாடுபோக தனித்தனியா வந்து நிக்கிறியள். ஆனா அவர் தன்ர பொம்பிளப் பிள்ளையோட வந்தவர், அவர்தான் சேர்ந்து குடிக்கேக்க யோசிச்சிருக்கோணும். நான் என்னட்ட வாறவயள வா குடிப்போமெண்டு கேட்டு கட்டாயப்படுத்தியிருக்கேனா? இல்ல உங்க ரெண்டு பேரையும் கட்டாயப்படுத்தி குடி பழக்கினேனா? என தான் செய்த தவறுக்கு நியாயம் தேடினான் அரை மயக்கத்தில். அவனைச் சமாதானப் படுத்தினான் நெடுங்கால கூட்டுக் காளவாணி நண்பன்.

“விர்றா மச்சான்“

இல்லடா எத்தினை பேர் இங்க வந்து எவ்வளவு கஸ்ரப்பட்டு வெளிநாட்டுக்கு அனுப்பி வச்சிருபோம்? அதில ஒரு தப்பு நடந்து போச்சு. அதுக்கு அவர ஆர் குடிச்சு கார்ட் அட்டாக்கில மேல போகச் சொன்னது?

என்றான் திமிராக.

அவன் அகங்காரப் பேச்சையும் தப்பித்துக்கொள்ளும் புத்திசாலித்தனத்தையும் கண்டு மனதிற்குள் பாய்ந்த காட்டாற்றுக் கோபத்தை அடக்கிக்கொண்டு பொருமினான், இண்டைக்கு நாலு வருசமா வெளிநாடு போறதுக்க உன்னட்ட வந்து சிறைபட்டுச் சித்திரவதை அனுபவிக்கிறேன். ”எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது நீ எங்களை அனுப்பி வைப்பாய்தானே? அதுக்குப்பிறகு பாரடா எந்த மூலையில இருந்தாலும் உன்னைக் கண்டந்துண்டமா வெட்டி சாக்கில போட்டு இந்த பங்களாவில ஆறுமாசத்துக்கு முன்னுக்கு நீ என்ர உடன்பிறவாச் சகோதரிய ஆருக்கும் தெரியாமப் புதைச்சியே அத மாரி புதைக்கிறேண்டா” என தான் விரும்பாத தென்னங்கருப்பட்டியில் ஐஸ் கட்டிகளை உடைத்துபோட்டுக் கலந்த சென்டால் மதுபானத்தை இருதடவை பருகிவிட்டு தன் நாடிக்கு கையை முண்டுகொடுத்து தனது யோசனைத் தீவிரத்திற்க்குள் ஊடுருவினான் மாறன்.

ராசுவின் மடியில் சிவந்தி தனக்கு இனி அம்மா, அப்பா இருவருமில்லை என்ற பேரிடியின் மன உளச்சலால் கதறி-னாள். சிவந்தியை நினைத்து அவள் இருண்ட பங்களாவிற்கு வந்த இரண்டு வருடத்தில் சிறு சந்தோசமாக இருக்கையில் தந்தையுடன் சேர்ந்து ராசுவிடம் தன் குழந்தைப் பருவத்தையும் பள்ளி நாட்களையும் சொல்லி நேரத்தைக் கழித்த நாட்கள் நினைவிற்கு வர சிவந்தி தவழ்ந்த கோணமலை பூஞ்சோலைக் கிராமம் ராசுவின் கண்களில் படமாடியது.

எந் நேரமும் சோலைக் குயில்களாலும் பாடும் பறவைக-ளாலும், பள்ளி நேரத்தில் பள்ளிச் சிறார்களின் கூக்குரல்களும், ஆலமரத்தடியில் அரட்டையடிக்கும் பழசுகளின் கூட்டமும், காலை-லயில் ஆலடிச் சந்தை

ஆரவாரத்திலும், மாலையில் கிட்டிப்புல்லடிக்கும் கூட்டாங் குஞ்சுகளின் குறும்புச் சண்டைகளாலும் எந் நேரமும் ஆர்ப்பரிக்கும் அழகிய பூஞ்சோலைக் கிராமத்தில் பேருக்கேற்ற பூஞ்சோலைகளும் நிறைந்திருக்கும். பள்ளி முடிந்து பறக்கும் சிவந்தியின் தோழிக்கூட்டம் பூஞ்சோலைகளில் மல்லிகையும் ரோஜாவும் செவ்வந்தியும் பறிக்கச் சென்றால் தோட்டக்காரன் கந்தன் வாய்க்காலில் தண்ணியை மறித்து அணை போட்டவன் மறித்தது பாதி மறிக்காதது பாதியாய் தலைப்பாவை கழற்றிச் சுழற்றிக்கொண்டு ஆவேசமா கத்துவான், சீமைச் சிறுக்கிக என் தோட்டத்தில களவெடுக்கிறியளா? இருங்கடி வாறேன் உங்க அப்பன்கிட்ட சொல்லுறேன் எண்டு திரத்திக்கொண்டு வர சிதறியோடும் சிவந்தியின் தோழிக்கூட்டம் சிறிது காலத்தில் அடங்கிவிட்டது.

ரோஜாவும் மல்லிகையும் பூப்பதை பறித்த சிவந்தி பூப்பெய்துவிட்டாள். பூவைப்போன்ற அவளிற்கும் அவள் தோழிக்கூட்டத்திற்கும் பூப்பறிக்க மனமில்லை, அவற்றை ரசிக்கத் தொடங்கிவிட்டாள். சிவந்தியும் தோழிகளும் பூப்பறிக்க வந்தால் பூக்கள் காற்றில் ஆடித் தம்மை இலைகளுள் மறைத்துக்கொள்ளும் காலம் கடந்து அவர்கள் பூந்தோட்டத்தில் நடந்துவந்தால் ரோஜாவும் மல்லிகையும் செவ்வந்தியும் கனகாம்பரமும் தம் தண்டிலிருந்து எகிறிக் குதித்து அவள் பாதத்தின் முன் விழுகின்றன. பூஞ்சோலையில் இரக்கமின்றித் தம் பசி தீர்ப்பதற்கு பூக்களை வதைக்கும் வண்டுகள் கூட்டம் அவர்கள் தலைமேல் ஊர்வலம் செல்கின்றன. இத்தனையும் தோழிக் கூட்டத்திற்கல்ல, அந்த ஒற்றை ரோஜா சிவந்தி அழகில் மட்டுமே!

வண்டுகள் கூட இரக்கப்படும் அவளைப் பார்த்து இந்த ரகு என்ற ராட்சச வண்டிற்கு மட்டும் ஏன் இரக்கமில்லாமல் போயிற்று? அவன் ஒரு நல்லது செய்கிறான் என்றெண்ணினால் அதைவிட மாபாவம் செய்து இந்தப் பிஞ்சின் வாழ்வை அழித்துவிட்டானே! இனியும் இவன் என்ன செய்யப்

போகிறானோ? என எண்ணுகையில்,

“ராசு..... ராசு...“ உரத்த குரல் கணீரென ஒலித்தது. குரல் வந்த திசை பூந்தோட்டத்தில் இருந்து சென்டால்

மதுபானம் அருந்திய ரகுவினது. ராசு வயதில் மூத்தவராயினும் அடிமைத்தனத்தில் அகப்பட்டுக் கொண்டதனால் ஓமண்ண இங்கதான் இருக்கிறேன், வாறதோ?

பின்ன என்னத்துக்கு கூப்பிட்டனான்?

இங்க வாரும். சிறிது போதையில் இருந்ததினால் ஏழனச் சிரிப்புச் சிரித்தான். அடுத்த நொடி மதுக்கடையில் ராசு ஆஜரானார்.

என்ன ராசு அந்தப் பெட்ட இன்னும் அழுகிறாளா?

ஓமண்ண!

சரி பரவாயில்ல அவள சமாதானப்படுத்துங்க சரியா?

சரியண்ண.

அது சரி இத்தின வருசமா வெளிநாடு போக என்னட்ட வந்த நீங்கள் இப்ப இந்த இடத்தவிட்டுப் போறதில்லயெண்டு முடிவாயே இருக்கிறியள், அப்பிடி என்னைப் பிடிக்குமா உங்களுக்கு?

”..............”

இல்ல என்னை பொலிசுக்கு கட்டிக் கொடுக்க போறியளோ?

”.............”

இல்ல இத்தின வருசமா குடிக்க மாட்டேனண்டு பிடிவாதமா இருக்கிறியள், என்ன மேட்டர்? ஏதாவது சதி பண்றியளோ?

போதையில் உளறத் தொடங்கிவிட்டான் ரகு.

இது ராசுவிற்கு பழகிப்போன கேள்விதான்.

சீ சீ அப்பிடியெல்லாம் இல்ல தம்பி.

ஆ, அது, தெரியுந்தானே இந்த பங்களா இல்ல என்னோட வந்து போற ஆக்கள பாக்கிறனிங்கதானே? மலாக்கா இல்ல இந்த மலேசியாவே என்ர கையில, என்று போதையில் ராசுவை

அதட்டினான். கூட இருந்த மற்றவர்கள் சரி விடுங்கண்ண என்றனர். சடாரென புத்தி தெளிந்தவன் போல, ராசு நாளைக்கு சமையலுக்கு எல்லா சாமானும் இருக்கா?

"..............."

என்ன இப்பிடி நிண்டா?

இல்ல தம்பி.இல்லையண்டா ஆர் வாங்கித்தருவாங்கள். இந்தா பிடி நாளைக்கு போய் எல்லா சாமன்களையும் வாங்கிக்கொண்டு வாரும் என்று நூறு ரிங்கிட்டை எடுத்து நீட்டினான். பணத்தை வாங்கின ராசு,

"தம்பி"

என்ன?

இல்ல பாவம் அந்தப் பிள்ளை இதுக்குள்ளயே கிடந்து அழுகிறாள், அவள கொஞ்சம் ஆறுதலா வெளியில கூட்டிக் கொண்டு போகட்டா நாளைக்கு என்றார் பணிவான குரலில், மதுமயக்கத்தில் இருந்தவன் சரியென்பதைப் போலத் தலையசைத்தான். ராசு நம்பிக்கையானவர், வெளிநாடு போக வந்து பல வருடங்களா இருண்ட பங்களவுக்குள்ள மாட்டிக்கொண்ட ஒண்டிக்கட்ட, வாழ்க்கை வெறுத்து வெளிநாடும் வேண்டாம் தாய்நாடும் வேண்டாம் என்ர உடம்ப இந்த வளவிலயே தாட்டுவிடுங்கோ தம்பி என்று தனேக்கே உயிரோடு சமாதி கட்டிக்கொண்டவர் ராசு.

காலையில் ராசுவையும் சிவந்தியையும் காரில் ஏற்றிக்கோண்டு களவாணி நண்பன் மலாக்காவின் கடைத்தெருவிற்கு சென்றான். தேவையான சாமான்களை ராசு வாங்கிக்கொண்டார். கூடவே சிவந்தியும் அழுது வீங்கிய முகத்துடன் ராசுவின் தேற்றலினால் வாங்கிய பொருட்களைத் தாங்கிக்கொண்டு கால் போன போக்கில் கடைத்தெருக்களில் நடந்தாள். ராசு இந்த இடைவெளிகளில் அவளுக்கு ஆறுதல் சொல்லி, அம்மா சிவந்தி "அரிச்சந்திரனிடம் மாட்டிக்கொண்ட சந்திரமதி ஒருத்திதான், இந்த ரகுவிடம் மாட்டிக்கொண்ட சந்திரமதிகள் ஏராளம். பங்களாவில் புதைக்கப்பட்ட அந்த அழகியின் சம்பவத்தை மறைத்து கொண்டு, நீ திடமா இருந்தாத்தான் உனக்காக காத்திருக்கும் உன்ர மச்சானட்ட அனுப்பி வைக்கிறேன் என்று நம்பிக்கை கொடுத்தார். அவள் கவலையில் இருந்து சற்று மீண்டு தானும் தயாராகிக் கொண்டாள். மூவரும் வந்த வேலை முடிந்து இருண்ட பங்களாவிற்கு விரைந்தனர். இவர்களை எதிர்பார்த்து, தாமதத்தினால் பங்களா வாசலில் அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தான் பதட்டமாக ரகு.

எங்கயடா போனனி நீ?

போன் பண்ணினா எடுக்காம, என்று கழவாணி நண்பனைத் திட்டித் தீர்த்தான் ரகு.

ராணி அன்ரி உள்ள இருக்கிறா அவள முடிய ஸ்ரெய்ட் பண்ணி, கொஞ்சமா மேக்கப் போட்டு வெளிக்கிடுத்த சொல்லு. இரவைக்கு மூண்டு பேருக்கு ஒகே அகிட்டுது. மாறனையும் மற்றவனையும் ரெடியாகச் சொல்லிட்டேன் இவளை ரெடியாகச் சொல்லு என்றவன் வலது கையில் இரு விரல்களில் மாட்டிக்கொண்ட கண்ணீர் புகைவிட்ட வெண்பஞ்சு சிகரெட்டை இருதடவை பெருமூச்சோடு உள்ளிழுத்து காலில்போட்டு அணைத்துவிட்டு தொலைபேசித் தொடர்பில் இணைந்தான்.

நள்ளிரவு மணி இரண்டு. கோலாலம்பூர் பன்னாட்டு விமானநிலையம் பயணிகளால் நிரம்பிவெளிய ஐவரும் விமானநிலையத்தினுள் நுழைந்தனர். ரகுவும் களவாணி நண்பனும் மலேசியக் குடியுரிமை பெற்ற தமிழர்கள். மாறனும் மணியும் சிவந்தியும் தற்காலிகமாக சட்டவிரோதமாக மலேசியாவில் தங்கியவர்கள். கள்ள பாஸ்போர்டில் செல்லவிருப்பதனால் பதட்டம் இவர்களிடம் தொற்றிக்கொண்டது. சிறிது நேரத்தில் ரகுவிடம் இருவர் பேசிமுடித்தவுடன் சிவந்தியும் மாறனும் மணியும் இமிகிரேசனுள் நுழைந்தார்கள். மூன்று மணிநேரம் கரைய மலாக்காவின் அந்த கிராமத்தை நெருங்கிக்கொண்டிருந்த ரகுவின் தொலைபேசி கிணுகிணுத்தது.

"ரிங் ரிங்... ரிங் ரிங்..."

தொடர்பை இணைத்துக்கொண்டான்.

திறக்காத அவன் வாய், உதடுகள் மட்டும் பூத்தது.

கிளியர் சேர் நாளை மறுநாள் சந்திக்கலாம் என்ற மலாய் மொழி எதிரொலித்தது. மலாக்காவின் அந்த கிராமத்தின் இருண்ட பங்களாவிற்கு வந்த இருவரும் ராசுவிடம் அளவான பேச்சோடு விடையத்தை தெரிவித்தனர். ராசு நெஞ்சில் கை வைக்காவிட்டாலும் கனத்த மனதின் பாரத்தை பெருமூச்சு விட்டு இறக்கி வைத்தார். ரகுவோ "என்ன ராசு மற்றவளுக்கு இங்கேருந்து போறதுக்கு விருப்பமில்லையோ,பிடிவாதம் பிடிக்கிறாள்? அவளா நானா பாக்கிறேன் இன்னும் ரெண்டு நாள்ள என்றான் மீதமுள்ளவர்களில் இருந்த ராசுவின் இன்னுமொரு உடன்பிறவாச் சகோதரியை நோக்கி.

இத்தாலி ரோம் நகரில் சிவந்தியின் வருகையறிந்து இரவோடிரவாக பிரான்சிலிருந்து புறப்பட்டுச் சென்ற அவளின் எஞ்சிய ஒரே துணை அவளுக்காக எதிர் பார்த்துக் காத்துக்கிடக்கும் அத்தை மகன். சிவந்தியும் மாறனும் சொல்லிவைத்தபடி காரில் ஏறிப் பிரான்சு நோக்கிப் பயணித்தனர், மணி அங்கேயே தங்கிவிட்டான். பலநாட்கள் தவம் கிடந்தும் பாராத தன் உறவைப் பார்த்தான் செல்வம். சிவந்தியின் முகத்தில் ஒரு தவிப்பு, பதைப்பு எதுவும் தென்படாதிருக்க ஏமாற்றம் மட்டுமே எஞ்சியது அவனுக்கு. சில மணிநேரம் கரைய செல்வம் வாழும் வெர்சாய் கிராமத்திற்கு பாதுகாப்பாக வந்தார்கள். செல்வம் பிரான்சு வந்து ஏழுவருடமும் வசிக்கும் வெர்சாய் கிராமம், கிராமம் என்பதை விட நகரம் என்றே சொல்ல வேண்டும். அதுதான் சரி! மன்னர்கால அரண்மனைகள் நிறைந்த கிராமம். இயற்கை எழிலுடன் கூடிய ஆற்றங்கரையை ஒட்டிய வீட்டில் செல்வம்மும் ஒரு பெரியவரும் அந்த ஏழுவருசமா ஒருவருக்கொருவர் துணையென வசிக்கின்றனர். செல்வத்திற்கு அந்த பெரியவர் தந்தை ஸ்தானம். எதுவாகினும் அவரின் பேரில்தான் நிகழும். இது சிவந்திக்கும் தெரியும் அவள் போனில் கதைத்த காலங்களில்.

வீட்டினுள் நூழைந்த சிவந்தி தான் புதியதொரு நாட்டில்



உதயமாகிவிட்டேன் என்ற ஆச்சரியம் எதுவுமில்லாமல் பெரியவரை லேசான சிரிப்புடன் நலம் விசாரித்தவள் மாடிப்படியில் ஏறிச்சென்று பால்கணியில் உள்ள நாற்காலியில் அமர்ந்து ஓடும் ஆற்று நீரையே வெறிக்கப் பார்த்தாள். செல்வமும் பெரியவரும் வந்த களைப்பு அதுதான் ரெண்டு நாள் பழகச் சரியா-கிடும் என்று செல்வத்தை சமாளித்து வேலைக்கு அனுப்பினார். பெரியவருக்கு வயது முதிர்ந்துவிட்டது! ஓய்வூதியந்தான். தனக்கும் செல்வத்திற்கும் சமைத்துப்போட்டு மிச்சமிருந்த காலத்தைக் கழித்தவர் தற்போது மூவரென நினைத்துக் கொண்டு சிவந்தியிடம் சற்றுப் பேசத் தொடங்கினார். என்னம்மா சிவந்தி போனில பத்துத் தெருவுக்கு கேக்கிறமாரி கதைப்பாய் இப்ப வந்து ஒரு வார்த்தைகூடக் கதைக்காமல் இருந்தா என்ன அர்த்தம். என்னம்மா நடந்தது அப்பா விட்டிட்டு போட்டார் என்ற கவலையா?

"………."

என்னண்டாலும் சொல்லு பிள்ள இப்பிடி கதைக்காமல் இருக்கிறது என்னையும் வேதனைப்படுத்துது, செவமும் பாவம் வேலைக்கு போறவன் சந்தோசமா இருக்கோணும்.

"………."

சிவந்தியிடம் மௌனமே பதிலாகியது.

ஒருநாள், இருநாள் என நாட்கள் ஓடி மாதங்கள் ஆயின. சிவந்தியின் முகம் நாளுக்கு நாள் மௌன பாதாளத்தை நோக்கியே பயணித்தது. செல்வமும் பெரியவரும் சிவந்தியின் நிலைகண்டு கவலைப்பட முடிந்ததே தவிர அவளை மாற்ற முடியவில்லை.

மாலை சமையலுக்கு சாமான்கள் வாங்கிக்கொண்டு வீட்டின் கேட்டைத் திறந்த பெரியவர் கடிதப் பெட்டியை எப்போதும் போல திறந்து பார்த்தார். வெளிநாட்டு கடிதம். மலேசியாவிலிருந்து செல்வத்திற்கு ராசு என்பவரிடமிருந்து. இருவரில் யாருக்கு கடிதம் வந்தாலும் ஒருவரின் அனுமதியின்றி பிரித்துப்படிப்பது வழமை. அன்றும் கடிதத்தை படித்தவர் அதிர்ச்சியில் வராண்டாவில் இருந்தவாறே உறைந்தார்.

"அன்புள்ள செல்வம், உன் நலம் கேட்பதற்கு கேட்கும் நானும் நலமாக இருக்க வேண்டும். இல்லையெனில் கேட்பதில் பயனில்லை! உனக்கு ஒரு அண்ணனாக இக் கடிதத்தை எழுதுகிறேன் நீ உன்னைத் திடப்படுத்திக்கொள். உன் மாமன் மகள் சிவந்தி ஒன்றும் அறியாத பேதை, நல்ல மனம் படைத்தவள் அது உனக்கும் தெரியும். அவளே உனக்கு வாழ்க்கைத் துணையாக அமைவது நீ செய்த புண்ணியம். இக் கடிதத்தை எழுத வேண்டிய கட்டாயம் அன்று இருந்ததில்லை. ஆனால் சிவந்தியின் போக்கு அவளை எந்த அளவிற்கு கொண்டு செல்லும் என்று ஒரு அனுபவசாலியாக அறிந்தவன். இதை உன்னிடம் தெரிவிக்க வேண்டும் என்பதனால் எழுதுகிறேன். எந்த நேரத்திலும் சிவந்தியை நீ இழக்காதே. அவள் ஒரு பூப்போன்றவள். பூஞ்சோலைக் கிராமத்தில் சோலைகளில் பூத்துக் குலுங்கிய ரோஜாவில் ஒன்றுதான் சிவந்தி. அவளை தோட்டத்திலுள்ள தேனெடுக்கும் வண்டுகளே இவள் அலர் என நினைத்து அவள் மேல் ஊர்வலம் செல்லும். ஆனால் இங்குள்ள ஏஜென்சி ரகு என்ற ராட்சச வண்டு அவள்மீது தேனெடுக்க ஆசைப்பட்டு அதை நிறைவேற்றியும் விட்டது. அதாலயே அவளின்ர அப்பா குடிச்சே அவள விட்டு போயிட்டார். சிவந்தி மாரி சில பிள்ளையள் இந்த ராட்சசன் ரகுவிட்ட மாட்டி இருண்ட பங்களாவுக்கு உரமாக்கிட்டான். அதில தப்பினது சிவந்தியிட அதிஸ்ரம். அவள் மீது தவறில்லை. அவள் பெண்ணாகப் பிறந்ததுதான் குற்றம்! அதுவும் இந்த வயதில் ஏஜென்சி மூலம் அங்க வர முயற்சித்தது அதைவிடத் தவறு. இதைத் தவிர அவள் ஒன்றும் அறியாதவள். சிவந்தியை எந்த நிலையிலும் கைவிடாதே. என்றும் அன்புடன் அண்ணனாக ராசு.

வேலை முடிந்து வந்த எதுவும் பேசாமல் சாப்பாட்டை நீட்டிவிட்டு படுக்கைக்கு சென்றுவிட்டார் பெரியவர். செல்வமும் சிவந்தியை ஒருமுறை அவளது அறையில் எட்டிப் பார்த்துவிட்டு நித்திரைக்கு சென்றுவிட்டான். விடிந்த பொழுது விடுமுறை நாள். வழமை போல பதினொரு மணிக்கு எழுந்தவன் டீ கப்புடன் நாற்காலியில் அமர்ந்து சிவந்தியின் செயற்பாட்டை எண்ணினான். பெரியவர் நெருங்கி வந்து செல்வம் உனக்கு ராசுவிடமிருந்து ஒரு கடிதம் நேற்றைக்கு வந்தது. என ஆரம்பித்தவர் கடிதத்தை நீட்டாமல் நடந்தவற்றை விளக்கினார். டீ கப் தவறி விழுந்து நொருங்கியது. சடாரென எழுந்து மாடிக்குச் சென்று அறையை உள்ளே பூட்டிவிட்டு கட்டில் மேல் குப்பற விழுந்து விம்மினான். பெரியவர் கதவை பலமுறை தட்டியும் பலனில்லை. இவற்றையெல்லாம் அவதானித்த சிவந்தி மனமுடைந்தாள். தேடி வந்த எனக்கிருந்த ஒரே துணையும் என்னை வெறுத்துவிட்டது. கண்களில் வடிந்த நீரைக் கையால் துடைத்துக்கொண்டு எழுந்து நடந்தாள் அவள் அறையை நோக்கி. சிறிது நேரத்தில் தனது பெட்டியுடன் புறப்பட்டுவிட்டாள் வராண்டா வழி. பெரியவர் தடுத்தும் நிற்காத சிவந்தி கேட்டைத் திறந்தாள். திடீரென அவள் தோளை பின்புறத்தில் ஒரு கை தடுத்தது. முகத்தைத் திருப்பி பார்த்தாள் செல்வம் தலை குனிந்து நின்றான். எதுவும் பேசவில்லை அவள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு குளியலறைக்குச் சென்றான். தன்மேல் நம்பிக்கை இல்லாதவரும் சாஸ்திரங்களை நம்புபவர்கள்ளும் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஒரு வாளி நிறைய நீர் நிறைத்து அவள் மேல் ஊற்றிவிட்டு பேசினான் சில வார்த்தை. "நீ என் சொந்தம், உன்மீது படிந்த கறை இந்த நொடியோடு கரைந்துவிட்டது. நீ எனக்காக மட்டும் பிறந்த சிவந்தி என்றான் வாய் நிறைய புன்னகையோடு.

# முகநூல் நன்றி நட்பூக்கள்



Selvi Arulmozhi Psychologist

**யாரும்** நம்மை ஏமாற்றுவதைவிட..நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதுதான் இங்கே அதிகம்...

நம்பலாம்..நமது திறமையை..வாய்ப்புகளை...நல்ல பல உண்மையான விஷயங்களை..நம்பலாம்...மேற்கொண்டு செயயல்புரியலாம்.....

அதே..சப்பை கட்டுகட்டிக்கொண்டு....நமது சோம்பேறி தனத்திற்கும்..இயலாமைக்கும்... சப்போர்ட் பன்னிகொண்டு. சம்மந்தமில்லாத பொருத்தமில்லாத காரணங்களை கற்பித்துக்கொண்டு... தன்னைத்தானே சமாதானபடுத்தி சோம்பி இருப்பது நம்மை நாமே ஏமாற்றுதல் இல்லாமல் வேறென்ன...

நம்மாள் ஆககூடி..உற்சாகமாக இருக்ககூடிய வாய்ப்புகள் எத்தனையே உள்ளன..அதையெல்லாம் விடுத்து..எப்பொழுதும் நமக்கு கிடைக்காததையும் பொருத்தமில்லாததையும் எண்ணி எண்ணி ஏங்குவதும் அதற்காக துயரப்படுவதும்.. நம்மை நாமே எமாற்றிக்கொள்வதுதான்...

நம்மாள் வெகு எளிதாக முடித்து சாதித்துகாட்டக்கூடிய காரியங்கள்கூட நமது சோம்பேறிதனத்தாலும்..தேவையற்ற சோகங்களாலும் தேங்கி கிடக்கும் அல்லது வேஸ்ட்டாகிபோகும் இதுகூட நம்மைநாமே ஏமாற்றிக்கொள்வதுதான்....

நாம் நினைத்தால் நம்மை தேற்றி உற்சாகபடுத்தி...மனதையும் உடலையும் நலமாக வைத்து வளமாக வாழமுடியும்..ஆனால் நான் எவ்வளவோ முயற்சி செய்யறேன்..என்னால முடியல என்பதுவும் நம்மைநாமே ஏமாற்றிக்கொள்வதுதான்...

இப்படி எல்லா வகையிலும்..யாருக்கும் வாய்ப்பே கொடுக்காமல் தேடி தேடி...விதவிதமாக நம்மைநாமே ஏமாற்றிக் கொண்டிருக்கும்போது..வேறு எதுவும் யாரும் பகை வேண்டுமா என்ன..நம் மனநலத்தை கெடுத்து..இந்த அரிய வாழ்க்கையை வீனடிக்க...

எல்லாத்தையும் நாமே செஞ்சிப்போம்... எல்லா ஆப்புகளும் நம்மாளயேதான்.. நம் கையாலயும் வாயாலயும்தான் ..இதுல ஏன் அடுத்தவங்கல குத்தம் சொல்லனும்

யோசிப்போம்.....

செல்வி...மனநல ஆலோசகர்

Ashok-yogan Kannamuthu

**இலங்கை** அரசியல் பற்றி என்னோடு உரையாடும் நமது நாட்டைச் சேர்ந்தவர்களிடம், அவர்கள் எமது மக்களின் மேம்பாட்டிற்காக ஏதாவது வழிகளில் உதவி புரிகின்றனரா என அறிய முயல்வேன்.

வெறும் "கருத்துக் கந்தசாமிகளாக"அவர்கள் தென்படும் பட்சத்தில், அவர்களுடனான எனது உரையாடலை பெரும்பாலும் நீடிக்க விரும்புவதில்லை.

இன்று, இலங்கை அரசியலும்- இனப் பிரச்சனையும், பெரும்பாலான அரசியல்வாதிகளுக்கும் அதனைச் சார்ந்தவர்களுக்கும், பெரும் வியாபாரமாக மூலதனக் குவிப்பாக மாறிவிட்டது.

ஒடுக்கப்பட்ட எமது மக்களின் பெயரால் அரசியல் வியாபாரம் செய்யும் இவர்கள், கோடிக் கணக்கான சொத்துக்களுக்கு வார-சுகளாக உருவாகிவிட்டனர்

.இலங்கையிலும், புகலிடங்களிலும் புலி சார்ந்த மற்றும் மகிந்த -அரச ஆதரவு குழுவினர்கள் நடாத்துகின்ற அமைப்புக்களின் நிதி மூலதன வருவாய்களை நாம் அறிய முயன்றால், இவர்களின் அயோக்கியத்தனமான அரசியல் வியாபாரம் நன்கு வெளிப்படும்.

இவ் வியாபார அரசியலை நடாத்தும் புலிசார்பு, மகிந்த சார்பு ,அரச சார்பு தனிநபர்களின் அசையும் அசையா சொத்துக்களை கொண்டு எமது நாட்டில் எமது மக்களுக்காக அரசியல் சமூக பொருளாதார வேலைத் திட்டங்கள் பலவற்றை நாம் நடாத்த முடியும்.

இவர்கள் எல்லோரும் எதிர் எதிர் அரசியல் நடாத்திக் கொண்டு, வியாபார அரசியலில் ஒன்றாய் கூடி குலாவி தங்கள் மூலதனத்தை காப்பாற்றி பெருக்கி கொள்கின்றனர்.

நமது பாராளுமன்ற உறுப்பினர்களும், ஏனைய அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுவதாக காட்டிக் கொள்பவர்களும் தங்களின் அசையும், அசையா சொத்துக்களை எப்பொழுது மக்கள் முன் பகிரங்கமாக முன்வைக்கின்றார்களோ, அன்றுதான் எமது ஒடுக்கப்பட்ட மக்களுக்கான விடுதலையின் முதல் வாசல்படி திறக்கப்படும்.

# பெண்ணுடலும் ஆபாசமும்... தொடரும் விவாதம்.




RAGUL CHANDRA·MONDAY> OCTOBER 5> 2015

**மேலே** உள்ள பதிவானது, நாம் விவாதிக்கும் “பெண்ணுடலும் ஆபாசமும்“ என்ற தலைப்புடன் தொடர்புடைய ஒரு பதிவாகும். இது நேரடியாக எனது பதிவிற்கான எதிர்வினையாக, எனது கட்டுரையின் கீழ் பதிவிடப்படாவிட்டாலும், சமகாலத்தில் ஒருவர் அதனை share பண்ணுவதும், அது நேரடியாக நாம் பேசும் விடயத்துடன் நேரடியாக தொடர்புடைய ஒரு விமர்சனம் என்பதாலும், அதனை எனது பதிவிற்கான ஒரு எதிர்வினை போலவே எடுத்துக்கொண்டு பதிலளிப்பது எனது கடமை என்றே நினைக்கிறேன். அதனாலேயே இங்கு இந்த விமர்சனம் பற்றி பேசுவது அவசியமானதாக ஆகிறது. சிக்கலான சமூக, அரசியல், சித்தாந்த, உளவி யல் காரணங்களின் இணைவால் (conjunction) உருவாகும் சிக்கலான பிரச்சனைகளை “கொச்சை நேர்காட்சிவாதத்தால்“ (vulgar positivism) நியாயப்படுத்த முனையும் ஆணாதிக்கத்தின் ஒரு அற்பவாதமாகவே இதனை காண்கிறேன். எப்படி என்று சற்று விரிவாக பார்ப்போம்.

தனக்குப் பிடித்தமான உடையை அணிந்துகொண்டு வீதியில் செல்லும் ஒரு பெண் எப்படி சம்பந்தப்பட்ட ஆணுக்கு ”மிளகாய்ப் பொடி” ஆகமுடியும். அதனை உங்கள் கண்களில் கொண்டுவந்து ”தூவியது” யார்? பல பூர்வகுடி சமூகங்களில் இல்லாத இந்த பிரச்சனை எமது ஆணாதிக்க சமுதாயத்தில் மாத்திரம் வருவதேன்.

பெண் என்பவள் ஆணுக்கு சமமான, சுதந்திரமும் உள்ள ஒரு சுயாதீனமான தன்னிலை (authentic subject) என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.கூடவே அவள் தனது சமுதாயம் பற்றியும், அதில் தனது இழிநிலை பற்றியும் புரிந்து கொண்டு, அதனை மாற்றியமைப்பதற்காக பிரக்ஞைபூர்வமாக போராடும் ‘செயலாண்மை’ (Agency) என்பதையும் முதலில் நாம் எமது மனதில் ஆழமாக இருத்திக்கொள்ள வேண்டும்.

இந்த மனிதஜீவியை வெறும் பாலியல் நுகர்பண்டமாக, பிள்ளைபெறும் இயந்திரமாக ஆணாதிக்க சமுதாயமானது காலாதிகாலமாக சித்தரித்து வந்துள்ளது. தனக்கென சொந்தமான தன்னிலையை கொண்டிராதவள் என்ற கருத்தின் அடிப்படையில் அவளது அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்துள்ளது. மடமையை பெண்ணின் ”நற்குணமாக” கற்பித்து பெண்ணுக்கான கல்வியுரிமை மறுக்கப்பட்டு வந்துள்ளது. அவளது உடை, நடமாட்ட சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றை கேள்விக்குரியாக ஆக்கி அவளை வீட்டுக்குள்ளேயே கட்டிப்போட்டுள்ளது. இன்னும் கருவளம், கர்ப்பம் என்பவற்றை காரணமாக காட்டி அவளை இரண்டாம் தர பிரசையாக கட்டிவைத்துள்ளது. இது மொழி, பொருளாதாரம், கலாச்சாரம், மருத்துவம், உளவியல் … போன்ற அனைத்து துறைகளிலும் பெண்ணின் இரண்டாம்பட்ச நிலையை உத்தரவாதப்படுத்தும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன.

இன்று உலகளவில் காணப்படும் பெண்களின் அசமத்துவ நிலைமையானது, நாம் உயர்வாக போற்றும் எமது அறநெறிகள், ஜனநாயக கருத்துக்கள், மற்றும் பல்வேறு சமத்துவம் பற்றிய சிந்தனைகளை கேலிக்குரியதாக ஆக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

இப்படிப்பட்ட நிலையில் சமூக அக்கறை உள்ளவர்களாக தம்மைக் காட்டிக்கொள்ளும் ஆண்கள், எமது சமூகத்தின் ‘பொதுப்புத்தியில்’ (commonsense) காணப்படும் மரபார்ந்த, பிற்போக்கான ஆணாதிக்க சித்தாந்தத்தின் வழிநின்று, பெண்களது மிகவும் நியாயமான கோரிக்கைகள் மீது அற்பத்தனமான கேலிகளை மேற்கொள்வதானது, சமூக விடுதலையின்பால் உ்ண்மையான அக்கறைகொண்ட எவரையம் அறச்சீற்றங்கொள்ளச் செய்வது தவிர்க்க முடியாததாகிறது.

இப்படிப்பட்டவர்களைப் பார்த்து நான் கூறக்கூடியதெல்லாம் ஒன்றுதான். நாம் ஒரு ஆணாதிக்க சமுதாயத்தில் வாழ்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். ‘பெண்ணியம்’ சார்ந்த பிரச்சனைகள் உங்களுக்கு இருப்பின் தயவுசெய்து அதனை வெறும் பொதுப்புத்தி மட்டத்தில் அணுகாமல், அறிவார்ந்த தளத்தில், கோட்பாட்டு மட்டத்தில் அணுக முயலுங்கள். இதற்கு நீங்கள் பிறந்தது முதலாக, சமுதாயத்தில் இருந்து விமர்சனமின்றி சுவீகரித்துக்கொண்ட ஆணாதிக்க சித்தாந்தத்தின் பிடியில் இருந்து உங்களை விடுவித்துக்கொள்வது முன்னிபந்தனையாகிறது. உங்களது comfort zone இற்கு வெளியில் வந்து மாற்றுத்தரப்பார் முன்வைக்கும் கருத்துக்களின் உண்மையான தார்ப்பரியம் என்ன என்பதை இதயசுத்தியுடன் புரிந்துகொள்ள முயலவேண்டும். மாறாக, ”எமக்கு தேவையான அறிவு முழுவதுமே எமது முன்னோர்கள் தந்துவிட்டுச் சென்றுள்ளார்கள்” என்ற பாணியில் செயற்படுவதானது, நாம் கொண்டுள்ளதாக கூறிக்கொள்ளும் சமூக அக்கறை என்பதை கேள்விக்குள்ளாக்கக்கூடியதாகும்.

எமது பொதுப்பத்தியானது, எமது சமுதாயத்தில் ஆதிக்கம் செய்யும் சக்திகளின் சித்தாந்தத்தினால் கட்டமைக்கப்படுவதாகும். அதனை பின்தொடர்ந்தால், எமது சமுதாயத்தில் காணப்படும் அத்தனை ஏற்றத்தாழ்வகளையும், அநீதிகளையும் ஒருவர் நியாயப்படுத்துவதில் போய்முடியம் என்பதை கவனத்தில் கொள்க.

இன்று சமூக விஞ்ஞானமானது நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் பல்வேறு துறைகளிலும் பல மரபான தடைகளை தகர்த்தெறிந்து முன்னேறிச் சென்றுகொண்டு இருக்கிறத. இந்த நிலையில் அவற்றின் ஆள, அகலங்களை புரிந்துகொள்ள முனையாது, வெறுமனே பொதுப்புத்தி மட்டத்தில் பேசுவதன் மூலமாக உங்களை கோமாளிகளாக காட்ட முனையாதீர்கள்.

தயவுசெய்து இதனை யாருமே தனிப்பட்ட தாக்குதலாக புரிந்துகொள்ளாதீர்கள். இது ஒரு மனிதனது அறச்சீற்றம் மாத்திரமே.



# சுடும் கதை

ப.பார்த்திபன்

**இன்று** வெள்ளிக்கிளமை.மணி மதியம் பன்னிரண்டைத் தாண்டியிருக்கும்இருக்கும் என்று நினைக்கிறேன். கறையான் அரிப்பது போன்று பசி என் குடலை அரிக்கத் தொடங்கி விட்டது. குசினிக்குள் வேலை செய்து பழக்கப்பட்டதால் என்னவோ எவ்வாறு பசி எடுத்தாலும் எந்த சாப்பாடிலும் நாட்டம் வருவதில்லை.பழகப்பழக பாலும் புளிக்கும் என்று அதைத்தான் சொல்வார்கலோ என்னவோ?

கடையில் வேலைசெய்பவர்கள் சாப்பிடுவதற்காக பச்சைமிளகாயை சிறிது சிறிதாக நறுக்கி, வழமைக்கு
அதிகமாக கலந்து சற்று உறைப்புத் தூக்கலாக நன்கு பொறித்த
சிறிய கடலை வடையைக்க கடித்துக்கொண்டு.இன்றைய சேவிசுக்குறிய மேசன்பிளாஸ் செய்வதில் கவனம்
முழுவதையும் புதைத்திருந்தேன்.என் கவனத்தை குலைப்பதாய் முதளாலியின் குரல்

"பிள்ள என்ன செய்யிரியல் சனம்வரத்தொடங்கீட்டுது இன்னும் மேசன்பிளாஸ் முடியல்லையே" என்ற அவரின் அதட்டல்
கன்னத்தில் அறையுமாற்போல் இருந்தது. அதே வேகத்தில், தன் வாய்குள்
"எவ்வளவு சொல்லுங்கே வேல நேரத்தில வேலைய முடிக்காம எந்த நேரமும் வாயாடினபடிதான்"
என்று புறு புறுத்த படியே
நான் சாப்பிடும் கடலை வடையால் கடையின் இலாபத்தில் ஒரு பங்கு குறைவதுபோல் பாவனை செய்துகொண்டு வாசல் கதவை நோக்கித் திரும்பினார்.நான், இன்னும் பத்து நிமிடத்தில எல்லாம் சரியாகிரும். அண்ண, முந்தநாள் பருப்புக்கறி சாடயா புளிக்குது பூவல(குப்பை தொட்டி) அடிச்சு விட்டடே என்று தான் சென்னேன். ஏதோ அவர் சொத்தை அழித்து விடுவது போல் பதட்டத்துடன்
"பொறும் கொஞ்சம்"
தொட்டு நக்கிப்பாத்துவிட்டு
"எலக்க பவுடரபோட்டு கிளரீட்டு பருப்ப நல்லா சூடாக்கும் புளிப்பு பழையா மணம் ஒண்டும் விளங்காது இன்றைய சேவிச சமாளிக்களாம். விளங்குதே"?என்று சத்தமாகச் சொல்லி கதவை அடித்து சாத்தினார்
எனக்கு வந்த கோபத்திற்கு எல்லாத்தையும் தூக்கி எறிந்துவிட்டு, உடனவே, வேலையை விட்டு இறங்கவேனும் போல் மனம் துடித்தது

ஆனாலும் என்ன செய்ய என் தேவைகள் உணர்வைக் கொன்று பணம் என்ற ஒற்றைச்சொல்லுக்குள்ளேயே புதைந்து கிடந்தது.வந்த கோவத்தை, மண்ணுக்குள் குமுறும்
எரிமலையாய் மனதுக்குள் அடக்கி கொண்டு. என்வேலையில் கவணம் செலுத்தவும்.
சந்தர்ப்பம் கிடைச்சுதுடா சர்வேசா நானும் நாலு வார்தை கதைத்து விட வேணும் என்பது போல் செல்வம்.
"செல்வம்"
என் வேலைப்பழுவின் சுமையைப் போக்க உதவியாளராக இருப்பவர். அவர் தமிழ்நாட்டைச்சேர்ந்தவர். பார்வைக்கு திட காத்திரமான முழு ஆண்மகன் ஆனாலும் வேலைநேரத்தில் அவர் நடவடிக்கைகள் அவ்வாறு இருப்பதாக நான் ஒரு போதும் பார்த்ததில்லை.

அவர் இலங்கைத்தமிழ் என்று பொய்யான தகவலை ஒப்றாவுக்கு கொடுத்து. எழுதிக்கொடுத்த கேசையும் பாடமாக்கி ஒப்பித்து அகதி உரிமையும் பெற்று விட்டார்.

சில நேரங்களில் ஊரில இருந்து உண்மைப் பிரச்சனையோட விசாஇல்லாமல் வேலையும் இல்லாமல் தெருத்தெருவா திரியும் எங்கட பிள்ளைகளைப்பார்த்தால் மனம் வெதும்பும்.இந்த நாட்டு அரசாங்கங்கம் மீது கடும் கோபமும் வரும்.

செல்வமோ எங்களைப் போல் வேகமாக வேலை செய்யும் விசுவாசக்காரனும் அல்ல. எனக்கு உதவாயாளராய் இருந்தாலும் நான் சொல்லுவதை செய்வதுகிடையாது.
அவ என்ன சொல்லுரது நான் என்னத்த கேக்குறது என்ற ஆண் திமிரில் நினைத்ததையேசெய்வார்.
பத்துரோன் நிக்கும் நேரங்களில் விடுங்கக்கா விடுங்கக்கா என்று என் கையில் இருக்கும் கரண்டியை பறித்து
வேலைசெயவதுபோல்.சினிமா காட்டுவதில் முனைப்பாப இருப்பார்.இது எனக்கு எரிச்சலை கூட்டினாலும்.நான் எந்த முறைப்பாடையும் முதாலாலியிடம் சொல்வதில்லை. ஆனாலும் சொல்லுவேன் என்று பயம்காட்டி எச்சரிதிருக்கிறேன்.நான் எச்சரிக்கும் நேரத்தில் அவர் "செல்லுரது என்றா சொல்லுங்க நீங்க சொல்லி அவரா நிப்பாடினா சோமாஸ் தருவார் தானே எனக்கும் வசதியாகப்போயிடும். நான் என்ன விசா இல்லாதவனே இல்ல பாசதெரியாதவனே இவேல்தார அடிமாட்டு சம்பளத்துக்கு வேலை செய்ய என்று என்மீது பாய்வான். மற்ற நேரங்களில் வேலை செய்வதை விடுத்து போனோடு மினக்கடுவான். அன்நேரத்தில் நான் எதும் கூறிவிட்டால் முகத்தை கடு கடுவென வைத்துக்கொண்டு என்மீதான கோவத்தை சட்டிபானைகளில் காட்டுவான்.ஏன் ஒருமுறை கிளாசைப் போட்டுடைத்து தன்கையை தானே வெட்டிக்கொண்டான்.

இன்று பத்துரோன் என்மீது எரிந்து விழுந்தது அவனுக்கு சாதகமாக போய்யிற்று.

" அக்கா நீங்க எவ்வளவு விசுவாசமா நேரம்காலம் பாக்காம ஒருநாளைக்கு பத்துமணித்தியாலம் கஸ்ரப்பட்டு வேல செய்யுரியல் அந்தாலுக்கு கொஞ்சமாவது மனுசதன்மை இருக்காபாருங்க தன்ர வருமானத்தில சின்னக்குறையும் வந்திரப்பிடாது.இது இவர் என்று இல்ல பொதுவா எல்லா
முதலாலிமார்களின் குணமும் இதுதான்.அதுவும் தமிழ் முதலாலிமார்கள் என்றா சொல்லாவே தேவையில்ல இந்த நாட்டுல எட்டுமணிவேலைக்கு அடிப்படைச்சம்பளம் மணிக்கு 9.15 போகுது இவங்கள் என்ன அதே குடுக்குறாங்கள் யாரும் விசாயில்லாத
பெடியல பிடிச்சு அடிமைமாதிரி வேல வாங்குறாங்கள் மாசம் எழுநூறு

எண்ணூறு என்று குடுத்து பேய்க்காட்டுறாங்கள்.அதையும் பிச்சுப்பிச்செல்லே குடுக்குறாங்கள். மனச்சட்சி உள்ள மனுசரே இவங்கள்.வெறும் வெள்ளவேட்டிக் கள்ளர்கள் என்று எனக்கு ஊசார் ஏற்றுவது போன்று கதைத்தான். அவன் சொல்வதும் நியாயம்தான். அவன்
இலங்கைத் தமிழ் என்று சொல்லி களவாகவிசா எடுத்தாலும் காலப்போங்கில் எங்கட சனங்கலோட பழகிப்பழகி தான் தமிழ் நாடு என்ற அடையாளத்தை தனக்குள் இருந்து அழிச்சுப்போட்டான். உண்மையில அகதிஎன்ற அடையாளம் எவ்வளவு வலியெண்டு அவன் உணர்வானா? யாரும் கேட்டாலும் தான் கேசிலகுடுத்த. ஊரையே சொல்லுவான்.

மறுபடியும் முதலாளி கதவைத்திறந்து"சனம் ஏறுது டிக்கட் அனுப்பப்போறன்" என்று கூறிக்கொணடு இருக்கும்போது சுகாதாரப்பிரிவு கடைக்குள் நுழைந்தது .அந்த சந்தர்ப்பத்தை சமாளிக்க முடியாத முதலாளி தன் இரு விழிகளும் பிதுங்க முரசு தெரியும் அளவிற்கு பற்களை அவர்களுக்கு காட்டினார்.தான் செய்யும் தவறுகளுக்கு எங்களில் பாய்பவர் இன்று செய்வதறியாது நின்றார். வந்தவர்கள் சாப்பட்டுக்கோப்பை அடுக்கிவைத்திருக்கும் இடத்தின் அருகில் இருந்த எலிப்பிழுக்கையை பார்து "செக்குவா சா"(என்ன இது) என்ற வாரே குசினி முளுவதையும் படம் எடுத்தனர். வந்தவர்களின் வார்தைகள் முதலாளியோடு கடுமையாகவே இருந்தது.அவரும் கெஞ்சும் முகச்சாயலில் அவர்கலேடு கதைத்துக்கெண்டு இருந்தார். நான் நினைக்கின்றேன் குசினி இருந்த நிலையை பார்க்க கடை இழுத்து சாத்தப்படும் என்று.அந்த நிமிடம் செல்வதகூதின் முகத்தையும் பார்த்தேன் அவன் முகத்திலும் அதே எண்ணம்தான்.நாளை தான் தெரியும் நல்தோ கெட்டதோ

---

# பசி

ஜெகன்



எங்கே போகும் எங்கள் திலீபனுயிர்
எம் உயிரோடு கலந்த உறவாகி வாழும்
சங்கே முழங்கென்று தலைவன் பெயருரைத்து
ஈழம் வரும் வரைக்கும் எம்மோடே
களமாடும்
இசையமைத்து
ஈழத்துப் பண் பாடும்
ஈழத்துப்பண்பாடும்.....

பசியோடு
காந்தியே உன்னை
காணத்துடிக்கிறேன்
ஈரம் காய்ந்து போன
உன் பாரதத்தை
என் நெஞ்சிலிருந்து
தூக்கி எறிகிறேன்.....

வல்லூறாய் வந்தெங்கள்
நல்லூரான் வீதியிலே -எங்கள்
நாதனுயிர் கொண்டு
போனதையே நாளும்
நினைக்கிறேன்...

இலட்சிய வேங்கையொன்று
சத்தியத்தில் சாகக்கிடக்கயிலே
நாளும் எங்களுயிர்
நாடி நரம்பெல்லாம்
வெந்து வேகையிலே
எள்ளி நகையாடி
ஏளனம் செய்தாயோ......

அஞ்சி அஞ்சி சாவோரல்ல நாங்கள்
நாளும் துஞ்சி படுக்கையிலே வீழ்வோரல்ல நாங்கள்
கெஞ்சி உந்தன் காலடியில் வீழ்வோமா?வீரம் நிறைந்த ஈழத்தாய் மடிய-
னிலே
வீரப்பிள்ளைகளாய்
எழுவோரே நாங்கள்

ஆற்றொணாத் துயரத்திலே
அறுமுகனின் வீதியிலே
அழுது தொழுது
ஆர்ப்பரித்து நின்றோமே...
வீற்றிருந்த எங்கள் விடுதலையின் மூச்சொன்று
மெல்ல மெல்ல பேச்சடங்கி மூச்சிழுக்கும் போதெல்லாம்
சீட்டு விளையாடி எம்மை சீரழித்த
அதிகார திமிரே..
நினையாதே..

நீ இல்லை என்றால்
ஈழம் இருண்டுவிடாது
எங்கள் தாகம் தணிந்து விடாது
தாயும் சேயுமாய்
களத்தில் நிற்போம்
திலீபன் தாகம் தீரும்வரை
பாயும் புலியாகி -எதிரி பாசறையின்
கதை முடிப்போம்....

# சில நெருடல் ..!

அஞ்சரன்



ஈழ சினிமா என்பதும் ,ஈழத்தை விட்டு வெளியில் சாதிப்பது என்பதும் ,ஈழ திரை அல்லது குறும்பட படைப்பளிகளுக்கு ஒரு பெரும் போராட்டம் என்றே சொல்லலாம் ,வெள்ளித்திரைக்கு கொடுக்கும் அளவு ஆதரவு இந்த ஈழ குறும்பட படைப்பளிகளுக்கு கொடுக்கபடுவதில்லை அவர்கள் எப்படி ஒரு நூறு வீத தரமான படைப்பை கொடுத்தாலும் ,அதை ஓரம் கட்டி தென்னிந்திய சினிமா மேகத்தில் மூழ்கி கிடப்பதும் தென்னிந்திய தொலைக்காட்சி பெட்டிகள் முன் கண்ணீரும் கம்மளையுமா உக்கார்ந்து அழுது வடிப்துமா ஈழ மக்களின் கலைத்தாகம் போகுது ...

ஆக அவர் திறமையான ஆளா இல்லையா என்பது எல்லாம் எங்களுக்கு முக்கியம் இல்லை அவர் இந்திய தொலைக்காட்சியில் ஒருமுறை தலைகாட்டினால் அவர் வாழ்நாள் ஹீரோ அதுக்கு பிறகு அவர் நடிக்காவிட்டாலும் பரவாயில்லை ,போற இடம் எல்லாம் அந்த பெயரை வைத்தே அவர் வாழ்வார் என்னும் ஒரு நியதியில் ஈழ சினிமா மேல் ஈழ மக்கள் பார்வை இருக்கு ,இவைகள் எவ்வளவு ஆரோக்கியமானது என்பது அல்ல இப்ப பிரச்சனை ,பல வருடங்களாக குறும்படம் ,நாடகம் ,என எதோ ஒரு படைப்பை இப்பவும் சமூகம் சார்ந்து கொண்டுவரும் ஈழ படைப்பாளிகளை எவரும் கண்டுகொள்வது இல்லை என்பதுதான் வேதனையானது ...

சரி ஐரோப்பா போன்ற பெரும் நகரங்களில் இடம்பெறும் திரை பட சம்மந்தமான நிகழ்வில் கூட முற்று முழுதா அதை ஒழுங்கு அமைப்பது ஈழத்தமிழர் என்றாலும், அங்கும் தென்னிந்திய நடிகர் தான் சிறப்பு அழைப்பாளர் அதுவும் அங்கின படமே இல்லாமல் ஒருவர் வெட்டியா சுற்றிக்கொண்டு இருப்பார் அவரை கூட்டி வந்து நடுக்கதிரையில் இருத்தி அழகு பார்ப்பதில் எமக்கு என்ன திருப்தி என்றுதான் விளங்கவில்லை ,..

இப்ப அது கொஞ்சம் முன்னேறி ஊர் சங்க கூட்டம் ,வீட்டு விஷேசம் எல்லாத்துக்கும் அங்கின இருந்து ஒரு குறுப்பை கூப்பிட்டு பொன்னாடை போர்த்தி அழகு பார்ப்பது பெருகிட்டு வாரது ,இதில் என்னதான் பெருமை இருக்கு என்றுதான் விளங்க வில்லை உங்களின் பிள்ளைகள் உங்களின் திறைமையான படைப்பளிகள் இருக்கும் போது , நேற்று வந்து ஒருவன் இந்திய டீவியில் பாடிட்டான் என்பதுக்காக அவரை கூப்பிட்டு கவுரவ படுத்துவதன் நேக்கம் இன்னும் புரியவில்லை , அதை ஏன் நீங்க உங்கள் ஈழ படைப்பளிகளுக்கு கொடுப்பதில்லை .........

ஆக வாக்கு போட்டுத்தான் என் திறமை அங்கீகரிக்க படவேண்டும் என்னும் நிலைக்கு சிறந்த ஈழ படைப்பாளிகள் தரம் இழுந்து போகவில்லை அவர்களின் அந்த தன்மான திமிர் என்பது அவர்களின் படைப்புக்கள் பேசிக்கொண்டு இருக்கும் ,அங்கீகரிப்பு என்பது ஒரு லைக்கில் கிடைக்கும் என்றால் அது உண்மையான படைப்பா இருக்காது ,ஒரு படைப்புக்கு விமர்சனம் எழுந்தால் மட்டுமே அவன் இந்த சமூகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் படைப்பை கொடுத்திருக்கிறான் என்று தெரிகிறது ...

ஆக சின்னத்திரை நாடகத்திலும் ...சொல்வதெல்லாம் உண்மையை விடவா உங்கள் வீடுகளில் கதை இல்லை என்பதால் கொஞ்சமா ஈழ படைப்பாளிகளின் குறும்படங்கள் ...முழு நீளப்படங்கள் ..போன்றவற்றுக்கு கொஞ்சம் ஆதரவு கரம் நீட்டினால் நல்லது புலம்பெயர் ஈழத்தமிழர்களே எங்கள் பிள்ளைகளை நாங்கள்தான் தட்டி கொடுத்து வளர்த்து விடவேணும் ,தனிய வியாபார இலாப இலக்கை மட்டும் கொண்டு இயங்கும் தனியார் தொலைக்கட்சிக்ளுக்கு அடிமை பட்டு கிடக்காது எங்களை சுற்றி என்ன நடக்கு என்பதையும் ஒரு நொடி பார்ப்போம் .



# ஒரு செயற்பாட்டாளராக, கைதியாக, நாடு கடந்து வாழ்பவராக முதிய வயதிலும் தேடப்படும் ஒருவராக



தனது பல தசாப்தகால அலைந்த வாழ்வின் முடிவில் கிட்டத்தட்ட நான்கு மாதங்களுக்கு முன் நாடு திரும்பிய டேவிட் ஐயா கடந்த வாரம் கிளிநொச்சியில் அமைதியாக இறந்து போனார். ஈழத்தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தின் எல்லையோரக் கிராமங்கள் நெடுக மைல் கணக்காக நடந்த கால்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் தமது பயணத்தை முடித்துக் கொண்டன.

ஒரு செயற்பாட்டாளராக, கைதியாக, நாடு கடந்து வாழ்பவராக முதிய வயதிலும் தேடப்படும் ஒருவராக ஆறுதலின்றி சதா அலைந்த ஒரு பெருவாழ்வு கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அதிகம் பேருடைய கவனத்தை ஈர்க்காமல் அமைதியாக முடிந்து போயிற்று.

அவருடைய இறுதி நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. அது அண்மைத் தசாப்தங்களில் அங்கு நடந்த இறுதி நிகழ்வுகள் எல்லாவற்றிலிருந்தும் வேறுபட்டுக் காணப்பட்டது. கட்சி ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும்

வேறுபட்டு நிற்கும் எல்லாத் தரப்புக்களும் பங்குபற்றிய ஓர் இறுதி நிகழ்வு அது. எல்லாக் கட்சிக்காரர்களும், செயற்பாட்டாளர்களும் அந்த நிகழ்வில் போற்றிப் பேசுவதற்கு ஏதோ ஒன்று டேவிட் ஐயாவின் வாழ்க்கை முழுவதிலும் இருந்திருக்கிறது.
பெருமளவில் அரசியல் பிரமுகர்களும் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்ட அந்நிகழ்வில் மிகக்குறைந்தளவு பொது ஜனங்களேபங்குபற்றியிருக்கிறார்கள். இந்நிகழ்வுநடந்து இரண்டு நாட்களின் பின் நடந்த மற்றொரு இறுதி நிகழ்வில் ஒப்பீட்டளவில் கூடுதலான பொதுமக்கள் பங்குபற்றியிருக்கிறார்கள். அதுவும் ஒரு செயற்பாட்டாளரின் இறுதிக் நிகழ்வுதான். தமிழ் ஐயா என்று அழைக்கப்படும் கிளிநொச்சியை மையமாகக் கொண்டு இயங்கிய ஒரு செயற்பாட்டாளரின் இறுதி நிகழ்வு அது. அவர் அந்த ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அதில் பொதுமக்கள் கூடுதலாகக் கலந்துகொண்டார்கள். ஆனால், டேவிட் ஐயா கிளிநொச்சியில் வசித்திருக்கிறார் என்பது அவர் இறந்தபொழுதே பலருக்கும் தெரியவந்தது.

தனது நாடு திரும்புதலை அவர் பிரசித்தப்படுத்த விரும்பவில்லைப் போலும். கிளிநொச்சியில் உள்ள குருகுலத்தை ஸ்தாபித்த மகா ஆளுமைகளில் ஒன்று நான்கு மாதங்களாக தங்கள் மத்தியில் சந்தடியின்றி வாழ்ந்து மறைந்திருக்கிறது என்பதை அந்த மக்களுக்கு யார் எடுத்துக் கூறுவது?

அவரது இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட எல்லா அரசியல்வாதிகளைவிடவும் அவர் அதிகம் 'ரிஸ்க்' எடுத்திருக்கிறார் அதிகம் அர்ப்பணித்திருக்கிறார். அந்த அர்ப்பணிப்புக்களுக்குப் பரிசாக எதையுமே பெற்றுக் கொள்ளவில்லை. திருமணம் செய்யவில்லை. சொத்து எதையும் சேர்த்து வைத்திருக்கவில்லை. யாரோடும் எதற்காகவும் சமரசம் செய்துகொள்ளவில்லை. இப்படிப் பார்த்தால் அவருடைய அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றிய எல்லா அரசியல்வாதிகளை விடவும் அவர் உயர்ந்து நிற்கிறார். அரசியல் வாதிகளுக்கும் செயற்பாட்டாளுமைகளுக்கும் அவர் ஓர் அரிதான முன்னுதாரணம். குறிப்பாக ஜனவரி 08இற்குப் பின் தமிழ் சிவில் வெளியை செயற்பாட்டு இயக்கங்கள் எவ்வாறு கையாளலாம் என்று சிந்திக்கப்படும் ஓர் அரசியல் சூழலில் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் அவரிடமிருந்து குறிப்பாக இரண்டு முக்கிய முன்னுதாரணங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒரு மெய்யான சத்தியாக்கிரகி எப்படி மெய்யாகவே ஆயுதப்போராட்டத்தை ஆதரிக்க வேண்டி வந்தது? என்பது.
ஒரு செயற்பாட்டு இயக்கம் ஆயுதப் போராட்ட இயக்கங்களோடு தொடர்புறுவதால் வரக் கூடிய பின்விளைவுகள் பற்றியது.
இவை இரண்டையும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

தமிழ் மிதவாதிகள் அடிக்கடி கூறுகிறார்கள் சத்தியாக்கிரகத்தில் ஏற்பட்ட தோல்வியே ஆயுதப் போராட்டத்திற்குக் காரணம் என்று. அது ஒரு முழு உண்மை அல்ல என்பது ஏற்கனவே எனது கட்டுரைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அகிம்சை என்பது சாகப் பயந்தவர்களின் ஆயுதம் அல்ல. அது சாகத் துணிந்தவர்களின் வாழ்க்கை முறையாகும். காந்தியைப் பொறுத்தவரை அது ஒரு வாழ்க்கை முறையாக இருந்தது. அதனால்தான் அவர் "எனது வாழ்க்கையே எனது செய்தி" என்று கூறத் தக்கதாக இருந்தது. ஆனால், எமது மிதவாதிகளைப் பொறுத்தவரை அகிம்சை எனப்படுவது ஒரு வாழ்க்கை முறையாக இருக்கவில்லை. அது ஒரு போராட்ட உத்தியாகத்தான் காணப்பட்டது. கடந்த ஆறாண்டுகால அனுபவமும் அத்தகையதே. அதாவது, சாகப் பயந்தவர்களின் போராட்ட உத்தியாகவே சத்தியாக்கிரகம் கையாளப்பட்டு வருகிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் ஈழத்தமிழர்கள் மத்தியில் அகிம்சையை ஒரு வாழ்க்கை முறையாக வாழ்ந்து காட்டிய ஆளுமைகள் மிக அரிதாகவே தோன்றியிருக்கிறார்கள்.
டேவிட் ஐயா அத்தகைய ஒருவர். மற்றொருவர் மு. தளையசிங்கம். டேவிட் ஐயா ஒரு சமூக அரசியல் செயற்பாட்டாளர். தளையசிங்கம் ஓர் ஆன்மீக மற்றும் சமூக அரசியல் செயற்பாட்டாளர். இருவரும் சத்தியாகிரகத்தை தமது நடைமுறை வாழ்வில் விசுவாசமாகக் கடைப்பிடிக்க முற்பட்டார்கள். டேவிட் ஐயா காந்தியம் என்ற பெயரிலேயே அமைப்பினை உருவாக்கினார். தளையசிங்கம் பூரண சர்வவோதயம் என்ற ஒரு அமைப்பைக் கட்டி எழுப்ப முற்பட்டார். காந்திய இயக்கம் அதன் ஆரம்பக் கட்டங்களில் வெளியிட்ட ஒரு அரிதான சிறிய நூலை அதன் ஆரம்பகாலச் செயற்பாட்டாளர்களில் ஒருவரும் பின்னாளில் புளொட் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவருமாகிய ஒருவர் வைத்திருந்தார். GANDHIYAM: VAVUNIYA-SRILANKA என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அந்நூலில் காந்திய இயக்கத்தின் குறிக்கோள்களும் செயற்திட்டங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த பண்ணைகளுக்கூடாக காந்திய விழுமியங்களை கட்டி எழுப்புவதே டேவிட் ஐயா மற்றும் மருத்துவர் ராஜசுந்தரம் ஆகியோரின் அடிப்படை இலக்குகளாக அந்நூலில் கூறப்பட்டுள்ளது.

வாகன வசதிகள் குறைந்த அந்நாட்களில் டேவிட் ஐயா கென் பாம், டொலர் பாம் போன்ற பகுதிகளை நோக்கி கிட்டத்தட்ட பதினைந்து மைல்களுக்கு மேலாக நடந்து சென்று பணிபுரிந்ததாக காந்தியச் செயற்பாட்டாளரகள் கூறுகிறார்கள்.

கிட்டத்தட்ட 45,000 பேர்களையாவது இவ்வாறு எல்லைப்புறங்களிலும் வவுனியா மற்றும் கிழக்குப் பிரதேசங்களிலும் காந்தியம் குடியேற்றியது என்று கூறப்படுகிறது. திருமலையில் உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள் பின்நாட்களில் அகற்றப்பட்டுவிட்டன. மட்டக்களப்பில் சில குடியிருப்புக்கள் மிஞ்சியிருப்பதாகக் கூறப்படுகிறது. வவுனியா மாவட்டத்தில் குறிப்பிடத்தக்களவு குடியிருப்புக்கள் தப்பிப்பிழைத்துள்ளன.

1977இல் நிகழ்ந்த இன வன்முறையின் விளைவாக தமிழ்ப்பகுதிகளை நோக்கி வந்த மக்களை குடியமர்த்தும் நோக்கத்தோடு ஒருங்கிணைந்த பண்ணைகள் உருவாக்கப்பட்டதாக மேற்சொன்ன நூலில் கூறப்பட்டுள்ளது. அப்படிப் பார்த்தால் காந்தியம் உருவாக்கிய ஒருங்கிணைந்த பண்ணைகளில் அநேகமானவை இன வன்முறையின் விளைவுகளே எனலாம். அவை ஒருங்கிணைந்த பண்ணை வடிவிலான குடியேற்றங்கள் மட்டுமல்ல. அரசால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட குடியேற்றங்களுக்கு எதிரான ஒருவித



தற்காப்புக் கவசங்களும்தான்.

நாட்டின் பல்லினத் தன்மையை உறுதி செய்வதற்காகவே அரசின் ஆதரவுடனான குடியேற்றங்கள் செய்யப்படுவதாக தென்னிலங்கையில் இருப்பவர்கள் விளக்கம் கூறுவார்கள். இலங்கை தீவின் எல்லா மாவட்டங்களையும் பல்லினத் தன்மைமிக்கவைகளாக உருவாக்க வேண்டும் என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆகப்பிந்திய கணக்கெடுப்புக்களின்படி இப்பொழுது இலங்கைத்தீவின் எல்லா மாவட்டங்களுமே பல்லினத்தன்மை மிக்கவைகளாக ஆக்கப்பட்டுவிட்டன.

ஆனால், மெய்யான பொருளில் பல்லினத்தன்மை மற்றும் பன்மைத்துவத்தை ஸ்தாபிப்பது என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் தனித்துவமான இருப்பை ஏற்றுக் கொள்வதில் இருந்தே தொடங்குகிறது. ஒரு மக்கள் கூட்டத்தின் தனித்துவமான இருப்பை கரைப்பதில் இருந்து அல்ல. அரசால் திட்டமிட்டுச் செய்யப்படும் குடியேற்றங்கள் ஒரு மக்கள் கூட்டத்தின் தனித்துவமான இருப்பை நீர்த்துப் போகச் செய்து கரைத்துவிடும் உள்நோக்கம் உடையவை. நிச்சயமாக அது பல்லினத்தன்மை மிக்க ஒரு சமூகத்தை உருவாக்காது. மாறாக அது எல்லாவற்றையும் ஒன்றாகக் கரைத்துவிடும். அதாவது, பெரிய இனத்துள் சிறிய இனத்தை கரைத்தழித்துவிடும் உள்நோக்கம் உடையது.

காந்தியம் கட்டி எழுப்பிய ஒருங்கிணைந்த பண்ணைகள் மேற்சொன்ன அரசின் உதவியுடனான குடியேற்றங்களுக்கு எதிரான ஒருவித தற்காப்புப் பொறிமுறைதான். இவ்வாறு காந்திய விழுமியங்களுக்கூடாகச் சிந்தித்த டேவிட்டும் ராஜசுந்தரமும் எப்படி ஆயுதப் போராட்டத்தின் ஆதரவாளர்கள் ஆயினர்? அவர்கள் மட்டுமல்ல, மு. தளையசிங்கம் அணியினரும் கூட பின்னாளில் ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்பவர்களாகவே மாறினர். ஆயின், ஈழத்தமிழர்கள் மத்தியில் தோன்றிய மெய்யான சத்தியாக்கிரகிகள் ஏன் ஒரு கட்டத்திற்குப் பின் அதற்கு முற்றிலும் மாறான ஒரு வழிமுறையை தெரிந்தெடுத்தார்கள்? அவர்கள் தமது நம்பிக்கைகளை மாற்றிக்கொள்ளவில்லை. போராட்ட வழிமுறைகளைத்தான் மாற்றிக் கொண்டார்கள். ஆனால், தமிழ் மிதவாதிகளில் எத்தனைபேர் அவ்வாறான ஒரு இறந்தகாலத்தைக் கொண்டிருக்கிறார்கள்? காந்தி சொன்னது போல "எனது வாழ்க்கையே எனது செய்தி" என்று கூறத்தக்க எத்தனை மிதவாதிகள் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு? இது முதலாவது. குறிப்பாக தமிழ் அரசியல்வாதிகள் டேவிட் ஐயாவிடம் இருந்து கற்றுக் கொள்ளவேண்டியது.

இரண்டாவது, தமிழ் செயற்பாட்டாளர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது.

1998ஆம் ஆண்டு ஜெயசிக்குறு படைநடைவடிக்கையின் போது வவுனியாவில் பாலமோட்டைக் கிராமத்திற்கு ஊடாக இடம்பெயர்ந்துகொண்டிருந்தோம். அப்பொழுது மூத்த அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர் பாலமோட்டையில் இருந்த காந்தியப் பண்ணையைச் சுட்டிக்காட்டி பின்வருமாறு சொன்னார். "காந்திய இயக்கத்தை அதன் போக்கிலேயே விட்டிருக்கலாம். ஆயுதப் போராளிகள் அதற்குள் நுழைந்திருக்கக் கூடாது. காந்தியமும் அதற்கு இடம்விட்டிருக்கக் கூடாது. இப்பொழுது அந்த இயக்கமும் இல்லை. காந்தியப் பண்ணைகளும் இல்லை. ஆனால், ஆயுதப் போராட்டத்தோடு நேரடியாக சம்பந்தப்படாது விட்டிருந்திருந்தால் காந்தியப் பண்ணைகள் தனித்துவமான ஒரு வளர்ச்சியைப் பெற்றிருந்திருக்கும்" என்று. இது தொடர்பில் காந்தியச் செயற்பாடுகளோடு அதிகம் தொடர்புபட்டிருந்த புளொட் இயக்க உறுப்பினர்கள் சிலரோடு உரையாடினேன். அவர்களிடம் இருந்து பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் டேவிட் ஐயா 'எழுநா' இதழுக்கு வழங்கிய நேர்காணலின் அடிப்படையிலும் ஒரு தொகுதி தகவல்களைத் திரட்டமுடிந்தது. ஆனால், அவை முடிந்த முடிவுகள் அல்ல. காந்திய இயக்கத்தின் வரலாற்றின் ஒரு பகுதியும் புளொட் இயக்கத்தின் வரலாற்றின் ஒரு பகுதியும் ஓரிடத்தில் சந்திக்கின்றன. எனவே, இதில் சம்பந்தப்பட்ட இந்த இரண்டு இயக்கங்களையும் சேர்ந்தவர்கள் வெளிப்படையாகப் பேசும்போது கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில்

தொகுக்கப்படும் ஒரு வரலாறே ஒப்பீட்டளவில் முழுமையானதாக இருக்க முடியும்.

டேவிட் ஐயா கூறுகிறார். புளொட் இயக்கத்தைச் சேர்ந்த சந்ததியாருக்கும் தனக்கும் இடையிலிருந்த தனிப்பட்ட உறவு காரணமாகவே காந்தியத்துக்கும் புளொட்டுக்கும் இடையே நெருக்கம் உண்டாகியது என்று. ஆனால், டேவிட் ஐயாவை விடவும் மருத்துவர் ராஜசுந்தரமே புளொட் இயக்கத்தோடு அதிகம் நெருங்கிப் பழகியதாகக் கூறப்படுகிறது. டேவிட் ஐயா அதிகபட்சம் திட்டமிடல் பணிகளையே மேற்கொண்டதாகவும் மருத்துவர் ராஜசுந்தரம்தான் அதிகபட்சம் பண்ணைகளில் களத்திலிறங்கி வேலை செய்ததாகவும் கூறப்படுகிறது.

தமிழ் மிதவாதிகளிடம் அதிருப்தி அடைந்த இளைஞர்கள், குறிப்பாக இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்கள் காந்தியத்தில் தொண்டர்களாக இணைந்தார்கள். இவர்களில் பலர் சந்ததியாரின் தொடர்பு காரணமாக பின்னாளில் புளொட்டில் இணைந்ததாகக் கூறப்படுகிறது. புளொட் இயக்கத்தைச் சேர்ந்த சுந்தரத்தால் வெளியிடப்பட்ட "புதியபாதை" என்ற பத்திரிகையை காந்தியத் தொண்டர்கள் விநியோகித்திருக்கிறார்கள். சுந்தரம் பிந்நாளில் சித்திரா அச்சகத்தில் வைத்து புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். சுந்தரம் கொல்லப்பட்டதை அடுத்து காந்தியத்துக்கும் புளொட்டுக்கும் இடையிலான உறவு ஓரளவுக்கு வெளியரங்கமாகியது என்று ஒரு மூத்த புளொட் உறுப்பினர் சொன்னார்.

ஆனால், தமது இயக்கத்தில் வினைத்திறன்மிக்க தொண்டர்களாக உள்ள பலரும் புளொட் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்பது டேவிட்டுக்கும் ராஜசுந்தரத்துக்கும் நன்கு தெரிந்திருந்தது என்று நம்ப இடமுண்டு. இக்கட்டுரைக்காக நான் சந்தித்த மூத்த புளொட் உறுப்பினர் ஒருவரிடம் கேட்டேன். காந்தியத்தில் புளொட் சம்பந்தப்பட்டிராவிட்டால் காந்தியம் எப்படிப்பட்ட ஒரு வளர்ச்சியைப் பெற்றிருக்கும்? என்று. அவர் சொன்னார் "காந்தியத்தின் வினைத்திறன்மிக்க தொண்டர்களாக இருந்தவர்களில் பலர் எமது இயக்கத்தோடு தொடர்புடையவர்கள்தான். அவர்கள் இல்லை என்றால் காந்தியம் அப்படி ஒரு வளர்ச்சியைப் பெற்றிருக்காது. தவிர எமது இயக்கத்தோடு சம்பந்தப்பட்டிருக்காவிட்டாலும் அரசு காந்தியத்தை நீண்ட காலத்துக்கு அனுமதித்திருக்காது" என்று.

சிறையுடைப்பில் தப்பிச் சென்ற பின் இந்தியாவில் டேவிட் ஐயா புளொட் இயக்கத்தின் தலைமைத்துவத்தோடு முரண்படத் தொடங்கினார். ஒரு கட்டத்தில் புளொட் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற தீப்பொறி அணியோடு அவர் சேர்ந்து இயங்கத் தொடங்கினார். அதன் பின் புளொட் இயக்கத்தால் அவருக்கு வழங்கப்பட்ட உதவிகள் எதையும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். நான்கு மாதங்களுக்கு முன் நாடு திரும்பிய போதும் அந்த இயக்கத்திற்கு அறிவித்திருக்கவில்லை. ஆனால், அவருடைய இறுதி நிகழ்வை அந்த இயக்கமே ஒழுங்கு செய்தது.

ஒரு செயற்பாட்டு இயக்கத்தின் ஒழுக்கத்திற்கும் ஆயுதப் போராட்ட ஒழுக்கத்திற்கும் இடையே வேறுபாடுகள் உண்டு. குறிப்பாக மக்கள் மயப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடும் ஒரு இயக்கமானது ஆயுதப் போராட்ட இயக்கத்தோடு நேரடியாக தொடர்புறுகையில் அந்த ஆயுதப் போராட்ட இயக்கத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் அந்த செயற்பாட்டு இயக்கத்தின் போக்கையும் தீர்மானிக்கின்றன. அந்த ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்படுமாக இருந்தால் அந்த செயற்பாட்டு இயக்கமும் தோற்கடிக்கப்படுகிறது.

ஈழத்தமிழ் வரலாற்றில் காந்தியம் இயக்கத்தைப் போலவே மற்றொரு உதாரணமும் உண்டு. யாழ். பல்கலைக்கழகத்தை மையமாகக் கொண்டு எழுந்த பொங்குதமிழ் என்று அழைக்கப்படும் ஒரு பேரரங்கச் செயற்பாடு அது. இலங்கைத்தீவின் வரலாற்றிலேயே முன்னுதாரணமற்ற ஒரு பேரரங்கச் செயற்பாடு அது. முதலிரு பொங்குதமிழ் நிகழ்வுகளும் ஒப்பீட்டளவில் சுயாதீனமானவை என்று கூறப்படுகின்றது. ஆனால், அதன் பின் நிகழ்ந்தவை ஆயுதப் போராட்டத்தின் அதிகரித்த செல்வாக்குக்கு உட்பட்டுவிட்டதாக ஒரு விமர்சனம் உண்டு. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின் கடந்த சுமார் ஆறு ஆண்டுகளிலும் பொங்குதமிழை ஒத்த ஒரு பேரரங்க நிகழ்வை பல்கலைக் கழகத்தை மையமாகக் கொண்டு உருவாக்க முடியாமல் போயிற்று. ஒரு செயற்பாட்டு இயக்கமானது ஆயுதப் போராட்டத்துடன் தொடர்புறுகையில் அதன் தனித்துவம் மிக்க அடிப்படை ஒழுக்கத்தை இழக்காமல் இருப்பது அவசியம். இல்லையென்றால் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்படும் போது அந்த செயற்பாட்டு இயக்கமும் பின்தள்ளப்பட்டுவிடும்.

தமிழ் சிவில் இயக்கங்கள் டேவிட் ஐயாவின் வாழ்க்கையில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய முக்கிய பாடம் இது.

ஆயுதப்போராட்டம் கருக்கொண்ட அதே தசாப்தகாலப்பகுதியில் உருவாகிய ஒரு மகத்தான செயற்பாட்டியக்கம் இடையிலே-யே தடைசெய்யப்பட்டு விட்டது. இப்பொழுது ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகளான பின்னரும் அப்படியொரு செயற்பாட்டியக்கத்தை கட்டியெழுப்ப முடியவில்லை. ஜனவரி எட்டுக்குப் பின் அதிகரித்த வரும் தமிழ் சிவில் வெளியை வெற்றிகரமாகக் கையாளத்தக்க செயற்பாட்டியக்கங்கள் எதை-யும் அரங்கில் காணமுடியவில்லை. தமிழ் மக்கள் செயலுக்குப் போகாமல் கூடுதலாகக் கதைத்துக்கொண்டிருக்கிறார்களா? இறந்தகாலத்திலிருந்து எதையுமே விரைவாகக் கற்றுத்தேற மாட்டார்களா?

தினக்குரல் பத்திரிகைக்காக நிலாந்தன் எழுதிய கட்டுரையை இங்கு பிரசுரிக்கின்றோம். நன்றி

**ஒருவன் வாழ்ந்த**
**வாழ்வின் அறத்தைக் கொண்டு**
**மரணத்தை மதிக்கிறார்**
**மனிதர்**

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

"பாவேந்தர்"

